[illegible]

V3 · No. 4 23 Jan 1930.

JL
ஊ211, N28ICN
N30·3·4
189088

KALANILAYAM. தனிப்பிரதி ரூ. 0 3 0

கலா நிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 0 0

காரியாலயம்:—
No. 11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 3.] 1930 ௵ ஜனவரி ௴ 23உ [No. 4.

5 FEB 1930 MADRAS

பொருளடக்கம்.

1.	தலையங்கம் (Leader).	61
2.	அப்பர் (வீணையும் யாழும்) E.N. தணிகாசலமுதலியார் B.A., B. L.	63
3.	நம்மாழ்வார் வைபவம் (பிரம்மாண்டத்தினமைப்பு) K. இராஜகோபாலாசாரியார் B.A. B.L.	66
4.	அறுபத்துமூன்று நாயன்மார் சரித்திர உண்மை (சிவனடியாரால் கலிநீங்கல்) E. N. பத்மாவதி அம்மாள் B A.	68
5.	தமிழ்ப்பாடம் (கிருஷ்ணன் தூது)	69
7.	இலஞ்சிப் பாவை (கணுக்காணல்) T. S. நடராஜபிள்ளை. B. A., B. L	71
8	கம்பராமாயணம் (மந்திரப் படலம்) T. N. சேஷாசலம் B. A., B. L.	73
6.	மானத சாத்திரம் (நடத்தை) T. P. மீனாக்ஷிசுந்தரம் M.A., B.L.	75
9.	மதிப்புரை (நளாயினி வெண்பா)	76
10	வர்த்தமானம்	79

இன்று முதல் அனுப்பிவருகின்ற வி. பிக்களைச் சந்தாநண்பர்கள் தவக்கமின்றிப் பெற்றுக்கொள்வர் என நம்புகின்றோம். மலேயா முதலிய அயல் நாடுகளுக்கு வி. பி. இல்லையாதலால் அங்கிருப்பவர் உடனே தம் சந்தாவை மணியார்டர் செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மானேஜர்.

கலா நிலயம்

அறியாமை வேண்டப்படும்.

3

அறிவிற் சிறந்தவர் இவரையன்றி வேறு இவ்வுலகத்தி லெங்காணு மிருந்திலர் என்னும் புகழ்வாய்ந்த ஸாக்ரிடீஸ் என்பவரது வாழ்நாள், விஷத்துடன் முடிந்தவிதம் சென்றவாரஞ் செப்பினோம். மற்று அவரறிவு எதனால் விளங்கியதோ வென்னின், தாயுமானவர் திருவாக்கின்படி, "யாதேனு மறியா வெறுந்துரும்பன்" தான் என்பதை அறிந்திருந்ததாலன்றி வேறன்று. தன்னுடைய அறியாமையை அறிந்திருந்தது மன்றி, அறிவாளிகள் என்னும் வேடத்தோடு உலகில், கவிகளென்றும் அரசியல் வாதிகளென்றும் வர்த்தகர்களென்றும் பற்பல தொழில்களில் வல்லுநர்களென்றும் களிநடம் புரிவார்தம்மைக் கண்டுபிடித்து, அவர்களுடைய அறிவெனும் கபடமூடியை முகத்தினின்று விலக்கி அவரது அறியாமையே உண்மையாவதை ஐயமில்லாவகை விளக்கிக்காட்ட வேண்டுவதும் தனது கடமையெனப் பூண்டிருந்து அதனால் பற்பலர் பகைக்கு அவர் பாத்திரமாயவாறும் முன்னர்க் கண்டோம். இப்பகையின் பயனாய் அவர்மீது குற்றம் சார்த்தி விசாரித்தபோது, அவர் தன் கட்சியை எடுத்து எதிர்வாதஞ் செய்துவருகையில், "அறிவு தமக்குளதென்று கருதுகின்றவர்களிற் பேதையர் பிறரில்லை" என்னும் இத்தத்துவத்தை விளக்கி, அதற்கிணங்கத் தான் ஒழுகியவாற்றையும் பற்றிப் பேசியதாக அவர் மாணவர்களுள் முதல்வரான பிளேடோ என்பவர் வரைந்துள சொற்கள் யாவரும் தம் உயிரினும் பெரியதாய்ப் போற்றுதற்குரிய உறுதியுடையனவாதலால், அதனை இங்கு மொழிபெயர்த்துத் தருகின்றோம்.—இனிவருவன ஸாக்ரடீஸின் மொழிகள் :—

* * *

"ஐய, இக்குற்றங்களை உன்மேல் சுமத்த நேர்ந்ததன் காரணமென்ன: ஏனிது! ஸாக்ரிடீஸே, விபரீதமாக ஏதோ நீ செய்துகொண் டிருத்தல்வேண்டும்? மற்றவரைப்போல் நீயும் இருந்திருப்பாயாயின், உன் பேர் இத்தனைப் பெரியதாகி உன்னைப்பற்றி யாவரும் பேசுமிப் பேச்சுக்கள் ஒருபோதும் எழுந்திரா. ஆதலின் இதற்கெலாம் காரணம்கூறுவாய்" என்று என்னை நீங்கள் கேட்கலாம். இக்கேள்வி தக்கதே. 'அறிஞன்' என்றப் பேர் எனக்கு வந்ததும், தீதுற்ற இப்புகழ் பரவியதும், எதனால் நேர்ந்ததென விளக்க முயல்கின்

றேன், கேளுங்கள். நீங்கள் கவனமாய்க் கேட்கவேண்டும். நான், பரிகசமே புரிகின்றேனென உங்களிற் சிலர் நினைக்கலாமெனினும், இங்கு உரைப்ப தவ்வளவும் உண்மையேயென்று உறுதி கூறுகின்றேன்.

"ஏதன்ஸ் நகரவாசிகளே, எனக்கிருக்கு மேதோ ஒருவித அறிவினால் எனக்கு இந்தக் கீர்த்தி வந்துளது. அது எந்தவிதமான அறிவு என்று கேட்பீராயின், எவ்விதமானதாயினும் மனிதனால் அடையக்கூடிய அறிவின் வகையைச்சேர்ந்ததே அது என்று பதில் கூறுவேன். இந்த அளவுவரையில் நான் அறிஞனென்று நம்புதற் கியலுமென நினைப்பது நேரிதே. ஆனால் சிலர், அமாநுஷ்ய அறிவு உடையவர்களாகத் தம்மைக் கருதிக்கொள்கின்றனர். அத்தகைய அறிவு எனக்கு இல்லையாகையால் அதன் இலக்கணம் இன்னதென்று என்னா லியம்பஇயலாது. ஆனால் என்னுடைய அறிவுதான் எத்தகையதோ, எவ்வளவோ, என்னின், நம்பத்தகுந்ததோர் சாக்ஷியால் அதனை நிரூபிக்க நினைத்துளேன். அந்தச் சாக்ஷியும் டேல்பி கோயிலில் உள்ள கடவுளேயாம். எனது நண்பனொருவன் நேராக டேல்பிக்கோயிலிற்குச்சென்றதும், என்னைவிட அறிவாளி எவனேனும் இருக்கின்றானா என்று அவன் கடவுளைக் குறிகேட்டதும், அக்கடவுள், என்னைவிட அறிவாளி இல்லையென்று குறிகூறியதும், யாவும் நீங்கள் அறிவீர்களே. அந் நண்பன் இப்பொழுது உயிருடன் இல்லையெனினும், அவனது சகோதரர் இதோ இந்த நியாயஸ்தலத்தில் வந்திருக்கின்றார். இதன் உண்மை அவரைக் கேட்டாலும் தெரியும்.

"இதனை இப்பொழுது நான் சொல்லிக்கொள்வதன் நோக்க மென்னவெனில், எனக்கு இப்படிப் பட்டவோர் கெட்டபேர் ஏன் வந்ததென்று விளக்குவதற்கேயாம். இவ்விதம் குறிசொல்லியதென்பதைக் கேள்விப்பட்டவுடன் நான், இக்கடவுளின் கருத்து யாவதா யிருத்தல் கூடுமெனச் சிந்திக்க லாயினேன். எனக்கோ அறிவென்பது எவ்வளவும் இல்லை. ஆயின் மக்களிலெல்லாம்பேரறிஞன் யானே எனப்பகர்ந்ததன் பொருள் என்ன? இது கூறியதோ ஒருதெய்வம்; தெய்வமோ பொய்க்காது! வெகுகாலம் இதைப்பற்றி யான் சிந்தனைசெய்தபின், கடைசியில், இவ்விஷயத்தைச் சோதிப்பதற்கு ஒருவழி உன்னினேன். என்னைவிட அறிவுடைய வொருவனைக் கண்டுபிடித்துவிடுவே னாயின், உடனே அக்கடவுள்முன் சென்று, "நின்குறி பிழைக்கவில்லையோ" என்று நேராக மறுத்துக் காட்டலாமன்றோ என்று எனக்குத் தோன்றியது. "என்னைவிட அறிவாளி இதோ ஒருவன் இருக்கின்றான்? நீயோ என்னின்மிக்க அறிவுடையொருவன் உலகில் இல்லை என்றாய்" என்று கேட்கும்போது அக்கடவுள் எவ்வித அமைதி கூறக்கூடும். ஆதலின் இதுவே வழி என்று எண்ணினேன்.

"இதன்படி முதலில், பேரறிவாளி என்ற புகழ் பெற்றுள ஒருவன்பால் சென்றேன். அவன் அரசியல்வாதத்தில் தலைமையாய் விளங்கியவன்—அவன் பேரை நான் இப்பொழுது சொல்ல நினைக்கவில்லை—அவனை நான் சோதித்தேன்; அதன் முடிவு பின்வருமாறு: அவனோடு சிறிதுபோது உரையாடிப் பார்த்ததில் உண்மையாக அவன் அறிவாளி அல்லன் என்று நினைக்க ஆரம்பித்தேன். ஆயினும், அநேகர் அவனை அறிஞன் என்று கருதுகின்றனர்; அவனுமோ இத்தனைபேர் எண்ணுவதைவிடத் தான் பின்னும் அதிக அறிவுடையவன் என்றே தன்னை மதித்துக் கொள்கின்றவனாயு மிருக்கின்றான். "ஐய, நீ உன்னை அறிவுள்ளவன் என்று எண்ணிக் கொண்டிருக்கின்றாயே யொழிய, உண்மையில் நீ அறிஞன் அல்லன்" என்று நான் அவனுக்கு நிரூபிக்கத் தலைப்பட்டேன். இதனால் அவன் என்னைப் பகைக்க ஆரம்பித்தான்; இன்னும் அங்கிருந்து இதைக் கேட்டுக்கொண்டிருந்த மற்றவர்களும் என்னிடத்தில் பகைகொள்ள லாயினர். இன்னபடி நான் அவனை விட்டகன்றேன். வாஸ்தவத்தில் அழகுடையதாயும் நன்மை தரத்தக்கதாயுமிருக்கின்ற ஒன்றும் நானாகிலும் அவனாகிலும் அறிந்திருப்பதாக நான் நினைக்கவில்லை. எனினும், என்னுடைய நிலைமை அவனைக்காட்டிலும் உயர்ந்ததென்றே கருதுகின்றேன். ஏனெனில், அவன் ஒன்றும் அறியானாயிருந்தும் எல்லாந் தெரிந்ததாக எண்ணிக் கொள்கின்றான்—எனக்குத் தெரியவுந் தெரியாது, தெரியுமென்று நான் நினைத்துக்கொள்வதும் இல்லை; இந்தவொருவிதத்தி லவனைவிடச்சிறப்புச் சிறிது உடையவனாகின்றேன். பிறகு நான், அரசியல்துறையில் தத்துவ உணர்வோடு விவகரிப்பதாகப் பாவிக்கின்ற வேறொருவனிடஞ் சென்றேன்; அங்கும் யான்கண்ட முடிவு அன்னதே ஆயிற்று. அவனையும் எனக்குச் சத்துருவாக்கிக் கொண்டேன்—அம்மாதிரி சத்துருவானவர் பின்னும் எத்தனையோ பலர்.

"மிகுதியும் பகையையே தூண்டிவருவதை மறந்திலேனாயினும் இவ்விதமே யான் ஒவ்வொருவரிடமாகச்சென்று சோதிக்கவேண்டியது இன்றியமையாததாயிற்று. எதனிலும் முதலாய்க் கடவுளின் வார்த்தையைக் கருதவேண்டியது அவசியமன்றோ! ஆதலின், அறிந்தவர்போல் தோன்றுகின்ற எல்லாரிடத்துஞ் சென்று, கூறிய குறியின் பொருளைக் காண முயலத்தான் வேண்டும் என்று நிச்சயஞ் செய்துகொண்டேன். சத்தியமாகச் சொல்கின்றேன்: இவ்வாராய்ச்சியின் முடிவாக, பெரும் பேர்படைத்து எல்லோராலும் கொண்டாடப் படுகின்றவர்கள், அறிவிலா இழுதைகள் இவர்களைக்காட்டிலும் இருக்கவுங்கூடுமோ என்னத் தக்கவர்களாகவும், பாமரர் என்று எண்ணப்படுவோர்களிற் சிலர் வாஸ்தவத்தில் அறிவுடையவர்களாகவும் நல்லவர்களாகவும், இருக்கின்றார்கள் என்பது கண்டறிந்தேன்.

"இதனோடு என் கருமம் முற்றுப்பெறவில்லை. ராஜதந்திரிகளை இவ்வண்ணங்கண்டறிந்தபின் கவிகளிடம் என் கவனத்தைச் செலுத்தினேன். அவர்களைக் காட்டிலும் எனக்கே அறியாமை அதிகம் இருக்குமென்ற நம்பிக்கை எனக்கு முதலில் இருந்தது. அவரவர் பாடியுள்ள நூல்களிலிருந்து சிறந்த பாசுரங்களை எடுத்து 'இவைகளின் பொருளும் நயமும் எனக்கு விளக்குக' என்று அவரவர்களை வேண்டினேன். இதனிலும் எனக்கு அவர் கற்பிக்கத் தகுந்தது ஒன்றுமில்லாமற் போயிற்று. தங்களுடைய நூல்களைப்பற்றித் தாங்களே பேசுவதைவிட மிகவும் நன்றாய் மற்றவர்களே பேசக்கூடியவர்களா யிருந்தனர். ஆதலின் கவிகள், நூல்கள் எழுதுவது அறிவினால் அன்றென்று ஒரு நொடியில் உணர்ந்துகொண்டேன். ஏதோ ஒருவித உள்ளுணர்வினாலோ அல்லது அருள்வரத்தினாலோ

அவர்களது கவிகள் பாடப்பெற் றிருக்கவேண்டும். வெறியாடிக் குறிசொல்பவர்கள் தங்கள் சொற்களின் பொருளைத்தாமே அறியாரேனும் பலநேரான விஷயங்களைச்சொல்வதுபோலவே கவிகளும்பாசுரங்கள் பாடுகின்றனரென அறியலாயினேன். உண்மை யிவ்வாறிருக்க, கவிகளோ தாம்பாடிய நூல்களின் பலத்தைக் கொண்டு தாங்கள் அறிந்திராத பிறவிஷயங்களிலும் தாம் மிகுந்த அறிவுடையவர்களென்று எண்ணிக் கொள்கின்றன ரென்பதும் எனக்குத் தெரியவந்தது. ஆதலின் அரசியல் வாதிகளைக்காட்டிலும் நான் உயர்ந்திருந்த வகையிலேயே கவிகளைவிடவும் உயர்ந்திருப்பதை யுணர்ந்து இவர்களை விட்டகன்றேன்.

"கடைசியில், கைத்தொழில் வல்லவர்களிடம் போய்ச்சேர்ந்தேன். இவர்களுக்கு அநேக நல்ல விஷயங்கள் தெரிந்திருக்க, எனக்கோ ஒன்றுந் தெரியாதாகையால், அவர்களிடம் நான் கற்கவேண்டியன பல இருக்கலாம் என்று எண்ணியது முற்றிலும் பிழையன்று. தொழில் முறைகளைக் கையாள்வதில் அவர் என்னைவிட அதிக அறிவுடையவர்களாகவே இருந்தனர். ஆனால், கவிகள் ஆளாகிக்கிடந்த பிழைக்கே, தொழில்தேர்ச்சி நன்றாக உடையவர்களும் ஆளாகிக் கிடந்தனர். நல்ல தொழிலாளர்களாய்த் தாம் இருத்தலாலேயே, தமக்குத் தெரியாத பெரிய விஷயம் ஒன்றுமில்லை என்னுமோர் எண்ணம் அவர்களைப் பிடித்திருக்கக் கண்டேன். இதனால் தொழிலில் அவர்களுக்கு இருந்த அறிவும் இருளடைந்து போயிற்று. ஆகையால், இவர்களைப்போன்ற அறிவு அறியாமை இரண்டுமின்றி நான் இருப்பதுபோன்றே இருப்பது நல்லதோ, அல்லது அவர்களைப்போல் இரண்டும் உடையனாய் இருப்பது நல்லதோ என்று யோசிக்குமளவில், என்னிலையே நன்னிலையென நிச்சயித்தேன்.

"இந்தவித ஆராய்ச்சி அநேக விரோதிகள் ஆக்கித் தந்ததுமன்றி என்மீது பலவித அவதூறுகள் பரவுவதற்கும் இடமாயிற்று. மற்றவர்களிடம் இல்லையென்று நான் காட்டுகின்ற அறிவு என்னிடம் இருப்பதாகக் கருதுவாராகிச் சிலர் என்னை 'அறிஞன்' என அழைக்க ஆரம்பித்தனர்: உண்மையோ என்னவெனில், அறிஞன் என்ற பெயர்க்குரியவர் கடவுள் ஒருவரே: டேல்பித்தெய்வம் தெரிவித்ததெல்லாம், மனிதனுக்கு இருக்கக்கூடிய அறிவு மிகஅற்பம் என்பதன்றி வேறன்று. அந்தக்கடவுள் ஸாக்ரிடீஸைப்பற்றிச் சொன்ன குறியன்று அது. என்னுடைய பெயரை ஒரு உதாரணமாக உபயோகப்படுத்தியதாகவே கருதுகின்றேன். "மாந்தர்காள், தன்னுடைய அறிவு எதனிற்கும் பயனற்றது என்று ஸாக்ரிடீஸ்போல் எவன் அறிந்திருக்கின்றானோ அவனே அறிஞன்" என்பதையே அத்தெய்வம் விளம்பியிருக்கின்றது.

"ஆகையால், அக்கடவுட் பணியைத் தாங்கினனாய் யான், அறிவுடை யொருவன்போல் ஆரவாரஞ்செய்கின்ற ஒவ்வொருவனையும் சோதித்து வருகின்றேன். சோதித்து அத்தெய்வமொழியின் மெய்ம்மையைச் சாதிக்கும்பொருட்டு அவன் அறிவாளியல்லன் என்பதை எடுத்துக் காட்டுகின்றேன்: இந்தக் கருமத்திலேயே ஆழ்ந்திருக்கின்ற எனக்குப் பொதுவிஷயங்களிலேனும் என் சொந்த விஷயங்களிலேனும் கவனம் செலுத்த நேரமில்லை"

* * *

இருபத்துநான்கு நூற்றாண்டுகளுக்குமுன் ஸாக்ரிடீஸ் கட்டுரைத்த இப்பொருளுரையின் ஒவ்வொரு சொல்லும் இற்றைக்கும் ஏற்றனவாய் அமைந்திருத்தலைக்காண்ப தருமையன்று. ஆயினும் ஒருவிடயம் நாம் மயக்கற உணர்தல்வேண்டும். பொய்ப்பொருள்களை மெய்யென்று மயங்கினராய் மாந்தர் பின்பற்றியுழலும் பேதைமையை அன்று நாம் பாராட்டிப் பேசுவது. இந்த அறியாமையைஉடையவன் அல்லன் அறிஞன். கல்வியின் முதிர்ச்சியால், ஒவ்வொருவனும் தான் அறிந்திருப்பது இவ்வளவு, இனி அறியவேண்டியது இவ்வளவு என்னும் பாகுபாட்டைத் தெள்ளிதின் ஓர்ந்து, தனது அறியாமைக்கு அடங்கி ஒழுகுதலே அறிவுடைத்தாம். தன்னுடைய அறியாமையை இவ்வண்ணம் அளந்துகொண்டவன் ஒருபோதும் எப்பாவமும் செய்யமாட்டான். தீமைகளெல்லாம் பாவத்தின் பரியாயங்களாதலால் தனக்கும் பிறர்க்கும்துயர்க்கிடனாகா வாழ்க்கைக்கு அடிமுதற்படியாவது, சில தெரியுமென்று நடிப்பதினும், தெரியாதன பலவுள என்பதைத் தேர்ந்துகொள்வதேயாம்.

அப்பர்

8. அப்பரும் அறுபத்தினான்கு கலைகளும்

2 வீணை (i) வீணையும் யாழும்

44-வது பக்கத் தொடர்ச்சி

வீணை யென்பது யாழா? அல்லது வேறு இசைக் கருவியா? என்பது பலர் பெற்ற ஐயுறவாம். வீணையே யாழெனக் கொண்டவர் பலர். வீணைவேறு யாழ் வேறு எனக் காட்டுவன நமது சைவத்திருமுறைகளே. ஆகவே யாழுக்கும் வீணைக்குமுள்ள பேதங்களை முதலிற்கண்டு பின்னர் அக்கருவியின் கலைவிலக்கணம் அப்பர் தேவாரவாயிலாய் நோக்குவோம்:—

சிலப்பதிகாரம் எழுதிய இளங்கோவடிகளும் அதற்கு உரையாசிரியரான அடியார்க்குநல்லாரும் வீணையை யாழ் என்றும், யாழ் என்பது வீணையென்றும் எண்ணினரென அவர் மொழிகளாற் காணலாம்.

நாரதன் வீணை நயந்தெரி பாடலு
மாயிரங் கண்ணோன் செவியக நிறைய
நாடக முருப்பசி நல்கா ளாகி
மங்கல மிழப்ப வீணை மண்மிசைத்
தாங்குக விவளெனச் சாபம்

(கடலாடுகாதை - 18 - 22)

இதற்கு அடியார்க்குநல்லார் "நாரதன் கலகப் பிரியனாதலால் தனது யாழைப் பகைநரம்புபட இசைத்தலின், தான் இங்ஙன மிசைத்தற்குக் காரண மின்றாகவும், இவள் கலங்கினமை நமக்கறிவித்து

நம்மால் இவளை முனிவிப்பான் வேண்டி நம்மை மதியா ளாயினளென, அவளோடும் சாபமிடுகின்றவன், வீணை மங்கலமிழக்க; மண்மிசைத் தாங்குக; இவள் மண்ணிற்போய்ப் பிறக்க வெனச் சாபமிட்டானென்பது" என உரை கூறினர். இதனால் வீணைக்கும், யாழ்க்கும் பேதம் உண்டென எண்ணியதாய்க் காணப்படவில்லை. இக்கொள்கையை நமது சமய குரவர்கள் ஆமோதிக்கவில்லை. வீணை வேறாகவும், யாழ் வேறாகவும் ஆங்காங்குத் திருமுறைகளிற் குறிப்பிட்டமை காணலாகும். அப்பரும்

அறைகலந்த குழன்மொந்தை வீணை யாழும் *
அந்தரத்திற் கந்தருவ ரமர ரேத்த
மறைகலந்த மந்திரமு நீருங் கொண்டு
வழிபட்டார் வானாளக் கொடுத்தி யன்றே
கறைகலந்த பொழிற்கச்சிக் கம்ப மேய
கனவயிரத் திரடேணை கலிசூழ் மாட
மறைகலந்த மழபாடி வயிரத் தூணே
யென்றென்றே யானரற்றி நைகின் றேனே.

—திருமழபாடி—திருத்தாண்டகம் - 2.

வீணையை, யாழ்போன்ற இசைக்கருவியாய்க் காட்டினாரேயன்றி, யாழே, வீணையெனப் பகரவில்லை. சேக்கிழார் பெருமானும், நந்தனார் சரித்திரத்தில் வீணையும் யாழும் எனப் பிரித்துப் பகருகின்றனர். ஆதலால் வீணை யென்பது, மண்மிசை வழங்கிவந்த இனிய இசைக்கருவிகளான குழல் யாழ் என்பனவற்றுள், யாழைப் போன்று அதன் இலக்கணங்களைப் பெரும்பாலும் ஏற்று, ஏழுநரம்புடன் விளங்கிய கருவியாகும். வீணை உலகத்தில் வழங்குவதற்கு முன்னர் யாழே வழங்கிவந்ததாகவும், தெய்வத் தன்மையுள்ள வீணை, மண்மிசை வர, யாழ் சிறிதுசிறிதாய் மறையலாயிற் றெனவும் அநுமானிக்கலாம். ஆனால் நமது சமயகுரவர்கள் காலத்தில் யாழும் வீணையும் வழங்கி வந்தன.

யாழ் நால்வகைப்படு மென்பர். அவையாவன:-இருபத்தொரு நரம்புகள் பெற்ற பேரியாழ், பத்தொன்பது நரம்புகள் பெற்ற மகரயாழ், பதினாலு நரம்பு பெற்ற சகோடயாழ், ஏழுநரம்புபெற்ற செங்கோட்டியாழ் என்பனவாம். இவற்றுள் பேரியாழ் பெருங்கலமெனப்படும். அதன் "கோட்டின தளவு பன்னிரு சாணும், வணரளவு சாணும், பத்தரளவு பன்னிரு சாணும், இப்பெற்றிக்கேற்ற ஆணிகளும், திவவும், உந்தியும் பெற்று, ஆயிரங்கோல் தொடுத்தியல்வது" என்பர்.

"ஆயிர நரம்பிற் றியா ழாகும்
ஏனை யுறுப்பு மொப்பன கொளலே
பத்தர தளவுங் கோட்டின தளவு
மொத்த வென்ப விருமூன் றிரட்டி
வணர்சா ணொழித்தென வைத்தனர் புலவர்"

"தலமுத லூழியிற் றானவர் தருக்கறப்
புலமக ளாளர் புரிநரம் பாயிரம்
வலிபெறத் தொடுத்த வாக்கமை பேரியாழ்"

இப்பேரியாழ் முதற்சங்கத்தின் காலத்திலேயே இறக்கலாயிற்று. இதன் உருவமே நமக்கு ஏற்படவில்லை. மகரயாழும் இடைச்சங்கத்தார் காலத்திலேயே இறந்ததாக அநுமானிக்கலாம். கோவலன் காலத்தில் இதன் உருவம் மாத்திரம் தமிழ ரறிந்தனர் போலும்.

"மங்கலம் பொறித்த மகர வாசிகைத்
தோரண நிலைஇய.........வீதி"

இந்திரவிழ வூரெடுத்த காதை (151-5)

அதாவது * அட்டமங்கலங்களையும் பொறித்த வாசிகை வடிவாக வளையச்செய்த மகரதோரணங்கள் நிலைபெற நிறுத்திய வீதியென்றும். எனவே மகரயாழ் இறந்தும் அதன் உருவம் தோரணங்களிற் காட்டப்பட்டன. பலவகை ஓவியங்களிலும் காட்டியிருக்கலாம். ஆயினும் அதை நூல்களில் மொழியக் கேட்டோமேயன்றி உலக வுபயோகத்தில் அக்காலத்தில் காண்கிலோம்.

சகோடயாழ், மாதவி பதுமாசனத்திலிருந்து பாடினாளெனச் சிலப்பதிகாரத்தில் வேனிற்காதையில் காண்கின்றோம். அதன் முறை காண்க:—

"மையறு சிறப்பிற் கையுறை யேந்தி
அதிரா மரபின் யாழ்கை வாங்கி
மதுர கீதம் பாடினள் மயங்கி
யொன்பான் விருத்தியுட் டலைக்கண் விருத்தி
நன்பா லமைந்த விருக்கைய ளாகி
வலக்கைப் பதாகை கோட்டொடு சேர்த்தி
யிடக்கை நால்விரன் மாடகந் தழீஇச்
செம்பகை யார்ப்பே அதிர்வே கூடம்
வெம்பகை நீக்கும் விரகுளி யறிந்து
பிழையா மரபி னீரேழ் கோவையே
யுழைமுதற் கைக்கிளை யிறுவாய் கட்டி †
யிணைகிளை பகைநட் பென்றிந் நான்கி
னிசைபுணர் குறிநிலை யெய்த நோக்கிக்
குரல்வா யிளிவாய்க் கேட்டன ளன்றியும்
வரன்முறை மருங்கி னைந்தினு மேழினு
முழைமுத லாகவு முழையீ றாகவும்
அகநிலை மருதமும் புறநிலை மருதமும்
அருகியன் மருதமும் பெருகியன் மருதமும்
நால்வகைச் சாதியு நலம்பெற நோக்கி
மூவகை யியக்கமு முறையுளிக் கழிப்பித்
திறத்து வழிப்படூஉம் தென்றிசைக் காணம்."

இவ்வாறு இக்கருவியை வாசிக்கும் மரபு, அவ்விசைக்கருவி வல்லோன் பகர்வதுபோல் இளங்கோவடிகள் தொகுத்துச் சுட்டலால், ‡இச் சகோடயாழ்

* இது செங்கோட்டியாழ் என்றே கொள்ளல்வேண்டும். துர்க்கையைப் பாடும் பாணர், சகோடயாழ் வழங்கிய கோவலன் நாளிலும், இவ்வியாழையே கைக்கொண்டு பாடியதாய்க் காணப்படுகின்றது :—

"......அந்தரி கோலம்
பாடும் பாணரின் பாங்குறச் சேர்ந்து
செந்திறம் புரிந்த செங்கோட்டி யாழிற்..."

புறஞ்சேரி யிறுத்த காதை - 104-106

* எட்டு மங்கலங்களாவன: —

"செங்கய லிரட்டை திருவார் சுடர்கண்ணாடி
பொங்கு கொடிவார் முரசந் தோட்டிபுணர்
கும்பம் மங்கலங்க ளெட்டாம்"

† இளி, விளரி, தாரம், குரல், துத்தம், கைக்கிளை, உழையென்பன முறையே எழு நரம்புகளின் பெயராம். இவையே வீணையின் எழுநரம்புகளுக்கும் பெயர்.

‡ சகோடயாழே மாதவி தலைக்கோல் பெற்ற ஞான்று யாழாசிரியன் கையி லிருந்தது :—

"ஈரேழ் தொடுத்த செம்முறைக் கேள்வியி
னோரேழ் பாலை நிறுத்தல் வேண்டி......"

அரங்கேற்று காதை - 70, 71.

கடைச்சங்கத்தார் காலத்தில் இறக்கவில்லையென்றும் அதற்குப் பின்னர்ப் பலகாலம் இருந்ததெனவும் அநுமானிக்கலாகும். நமது சமயகுரவர்கள் காலத்திலும் அது வழங்கியிருக்கலாம். ஆயினும் ஏழுநரம்பைக் கொண்டு, மூன்று சங்கங்கள் காலத்திலும் வழங்கிய செங்கோட்டி யாழே பெரும்பாலும் தேவாரத் திருமுறைகளிற் காணப்படுவ தென்னலாகும்.

வேழத் தின்னுரி போர்த்த விகிர்தனார்
தாழச் செஞ்சடை மேற்பிறை வைத்தவர்
தாழைத் தண்பொழில் சூழ்ந்தபைஞ் ஞீலியார்
யாழின் பாட்டை யுகந்த வடிகளே.

(திரும்பைஞ்ஞீலி - திருக்குறுந்தொகை - 5)

என்பதையும்,

"ஏழு மாமலை யேழ்பொழில் சூழ்கடல்
ஏழு போற்று மிராவணன் கைநரம்
பேழு கேட்டருள் செய்தவன் பொற்கழல்
ஏழுஞ் சூழடி யேன்மனத் துள்ளவே."

(தனித் திருக்குறுந்தொகை - 7)

என்பதையும், உற்று நோக்கின் அப்பர்காலத்தில்எழுநரம்புபெற்ற யாழே பெரும்பாலும் வழங்கிக் கையாளப்பட்டதென விளங்குகின்றது. இக்கருத்தே

வரும்பயனை யெழுநரம்பி னோசை யானை
வரைசிலையா வானவர்கள் முயன்ற வாளி
யரும்பயஞ்செ யவுணர்புர மெரியக் கோத்த
வம்மானை யலைகடனஞ் சயின்றான் றன்னைக்
கரும்பவிழுங் குழன்மடவார் கடைக்க ணோக்கிற்
றளங்காத சிந்தையராய்த் துறந்தோ ருள்ளப்
பெரும்பயனைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே.

(கோயிற் பெரிய திருத்தாண்டகம் - 7)

என்னும் பாசுரத்திலும் அமையப்பெறும்.

இவ்வாறு செங்கோட்டியாழ் ஏழுநரம்புடையதேனும், தெய்வீகக் கருவியான வீணைபோல் * பரமன் கையில் இவ்வியாழிருந்ததாய்த்தேவாரத்தில் எச்செய்யுளிலும் பகரப்படவில்லை. ஆயினும் உயர்திணை மக்கள் யாழ் வாசித்ததாயும், உமையவள் திருமொழிக்கு யாழின் இனிமை யுண்டென்றும் அப்பர் கூறுவர்.

சூழு மரவத் துகிலுந் துகில்கிழி கோவணக் கீளும்
யாழின் மொழியவ ளஞ்ச வஞ்சா தருவரை போன்ற
வேழ முரித்த நிலையு விரிபொழில் வீரட்டஞ் சூழ்ந்து
தாழுங் கெடிலப் புனலு முடையா ரொருவர் தமர்நா
மஞ்சுவ தியாதொன்று மில்லை யஞ்ச வருவதுமில்லை

திருக்கெடில வீரட்டானம் - பண் - காந்தாரம் 9.

அவ்வாறே சுந்தரரும்,

"யாழைப்பழித் தன்னமொழி மங்கையொரு பங்கன்
பேழைச்சடைமுடிமேற்பிறைவைத்தானிடம்பேணில்
தாழைப்பொழிலூடேசென்று பூழைத்தலைநுழைந்து
வாழைக்கனி கூழைக்குரங் குண்ணும் மறைக்காடே"

என்றும், சம்பந்தர்

"யாழ்நரம் பின்னிசை யின்னம்பர் மேவிய
தாழ்தரு சடைமுடி யீரே
தாழ்தரு சடைமுடி யீருமைச் சார்பவர்
ஆழ்துய ரருவினை யிலரே"

என்றும், பாடின காண்க. பரமன் வீணையில் வல்லவரென்று மூவரும் கூறுவர்.

கைகிளரும் வீணை வல்லவன் கண்டாய்
காபாலி கண்டாய் திகழுஞ் சோதி
மெய்கிளரு ஞான விளக்குக் கண்டாய்
மெய்யடியா ருள்ளத்து வித்துக் கண்டாய்
பைகிளரு நாக மசைத்தான் கண்டாய்
பராபரன் கண்டாய் பாசூரான் கண்டாய்
வைகிளரு கூர்வாட் படையான் கண்டாய்
மறைக்காட் டுறையு மணாளன் றானே.

திருமறைக்காடு - திருத்தாண்டகம்-2.

"பரசுபாணியர் பாடல் வீணையர் பட்டினத்துறை பல்லவனீச்சரத் தரசுபேணி நின்றாரிவர் தன்மை யறிவாரார்?" என்று சம்பந்தரும் பாடியனகாண்க. ஆகையால் பரமன் கையிலிருப்பது வீணையேயாம்.*

பாதங்க ணல்லார் பரவி யேத்திப்
பத்திமையாற் பணிசெய்யுந் தொண்டர் தங்கள்
ஏதங்க டீர விருந்தார் போலு
மெழுபிறப்பு மாளுடைய வீச னார்தாம்
வேதங்க ளோதியோர் வீணை யேந்தி
விடையொன்று தாமேறி வேத கீதர்
பூதங்கள் சூழப் புலித்தோல் வீக்கிப்
புலியூர்சிற் றம்பலத்தே புக்கார் தாமே.

கோயிற்புக்க திருத்தாண்டகம்—10.

பட்டுடுத்துத் தோல்போர்த்துப் பாம்பொன்றார்த்
பகவனார் பாரிடங்கள் சூழ நட்டம் [துப்
சிட்டராய்த் தீயேந்திச் செல்வார் தம்மைத்
தில்லைச்சிற் றம்பலத்திற் கண்டோ மிந்நாள்
விட்டிலங்கு சூலமே வெண்ணூ லுண்டே
யோதுவதும் வேதமே வீணை யுண்டே
கட்டங்கங் கையதே சென்று காணீர்
கறைசேர் மிடற்றெங் கபாலி யார்க்கே.

கோயிற்புக்க திருத்தாண்டகம் 11

இத்தகைய வேதகீதன் வீணையின் தொழில் என்னையோவெனின் சமான்யமானதன்று. எல்லாமழியும் மாகா பிரளயகாலத்தினின்று மீள உலகம் சிருஷ்டிப்பது மதுவேயாம்:—

பெருங்கடன் மூடிப் பிரளயங்
கொண்டு பிரமனும் போய்
இருங்கடன் மூடி யிறக்கு
மிறந்தான் களேபரமுங்
கருங்கடல் வண்ணன் களேபரமுங்
கண்டு கங்காளராய்
வருங்கடல் மீளநின் றெம்மிறை
நல்வீணை வாசிக்குமே.

ஆகையால் வீணையினுஞ் சிறந்ததோர் தெய்வீக இசைக்கருவி யுண்டோ? அதன் ஏற்றமும் அதன் கலையேற்றமும் யாவரே பகரவல்லார்?

* "கோணன் மாமதி சூடரோ
கொடுகொட்டி காலர் கழலரோ
வீணைதான் அவர் கருவியோ
விடையேறு வேத முதல்வரோ
நாண தாகவோர் நாகங்
கொண்டரைக் கார்ப்பரோ நலமார்தர
ஆணை யாக நம்மடிகளோ
நமக்கடிக ளாகிய வடிகளே" —சுந்தரர்

* "வித்தக வீணையொடும் வெண்புரி நூல்பூண்டு
முத்தன வெண்முறுவல் மங்கையொ டும்முடனே
கொத்தல ரும்பொழில்சூழ் கூடலை யாற்றூரில்
அத்தனிவ் வழிபோந்த வதிசய மறியேனே"

—சுந்தரர்

நம்மாழ்வார் வைபவம்.

பிரம்மாண்டத்தின் அமைப்பு

Cosmogony of the Universe

[51-வது பக்கத் தொடர்ச்சி.]

இம் மாஹானுபாவன் பிரம்மாண்டத்தின் அமைப் பைப்பற்றித் தற்காலத்தில்நடைபெறும் தத்துவ சாஸ்திரங்களும், வானசாஸ்திரங்களும் எவ்வண்ணம் கூறுகின்றனவோ அவ்வண்ணமே சமார் மூவாயிரம் நாலாயிரம் வருஷங்களுக்குமுன்னர் அறுதிபிட்டிருக் கிருரென்று நாம் முன்ஞெரு வியாஸத்தில் செப்பி யுளோம். இதை விளக்க, 4-ம் பத்து 9-ம் திருவாய் மொழி 8-ம்பாசுரத்தை அர்த்தவிமர்சம் செய்வோம். அதற்குநேர்நேராகத் தற்காலத்திய சாஸ்திர தத்துவ தர்சிகள் உரைப்பதையும் எடுத்துக் காட்டுவோம்

பாசுரம்.

காட்டிநீ கரந்துமிழும்
நிலம்நீர் தீ விசும்பு கால்
ஈட்டிநீ வைத்தமைத்த
இமையோர்வாழ் தனிமுட்டைக்
கோட்டையினைக் கழித்துஎன்னை
உன்கொழுஞ்சோதி யுயரத்துக்
கூட்டரிய திருவடிகள்
எஞ்ஞான்று கூட்டுதியோ

"நீ" என்று இங்குக் கூறியுள்ளது பகவான் நாராயண னையே. காட்டி—பூர்வ சிருஷ்டிகாலத்திலே வியக்த மாக்கி, அதாவது சிருஷ்டிசெய்து. கரந்து—பிரளய காலத்தில் சூக்ஷமமாக்கி, அதாவது மறைத்து. நீ உமிழும்—திரும்பிச் சிருஷ்டிகாலம் அந்தவாறே நீ படைக்கும். இவ்வாறு உனக்கு லீலாவிஷயமாய்த் திரும்பித்திரும்பி ஆக்கவும் மறைக்கவும் உதவியாகும் நிலம் நீர் தீ விசும்பு கால்—பிருதிவி அப்பு தேயு ஆகாசம் வாயுக்களை-அதாவது எந்தஎந்தப் பூதசூக்ஷ மங்கள் கூடி இப்பஞ்சபூதங்களாகின்றனவோ அவை களைக் கொண்டே,

ஈட்டி—திரட்டி, அதாவது, எப்படிப் பகுத்துப் பிரித்துத் திரும்பி எங்ஙனம் ஒன்று சேர்க்கவேண்டு மோ அவ்வண்ணம் ஒன்று சேர்த்து,

வைத்து—அண்டத்தில் ஆவரணமாக ஸ்தாபித்து, நீ அமைத்த—இவற்றையே கொண்டு நீ சிருஷ்டி செய்ததான,

இமையோர்வாழ்—பிரம்மன் முதல் இந்திராதி தேவதைகள் வசிக்கின்ற பதினுலு லோகங்களையும்,

தனி—ஒப்பிலாப் பெருமைவாய்ந்த, அல்லது அசா தாரணமான,

முட்டைக் கோட்டையினை—பிரம்மாண்டமாகிற கோழிமுட்டை போன்ற கோட்டையை,

கழித்து—தாண்டுவித்து

உன்—உன்னுடைய ஒப்பில்லாத திவ்வியமாகிய,

கொழுஞ்சோதி—கொழுத்த ஜோதிஸ் மயமான,

உயரத்து—மேல் பிரதேசத்திலே, ஸ்ரீ வைகுண் டத்திலே,

கூட்டரிய—ஸ்வய பிரயத்தினத்திஞல் உன் அரு ளின்றி எவருக்கும் சாதிக்க இயலாத—Salvation is essentially by grace though one must strive for it.

திருவடிகள் - திருவடிப்போதுகளிலே

என்னை—எஞ்ஞான்று—எந்தக் காலத்திலே

கூட்டுதி—கூட்டப்போகிறாய் - ஸ்ரீராமபிரானுக்கு அயோத்திக்கு மீளப் பதினுலு வருஷமென்ற விதி போல் ஒருவாறு கால நிஷ்கர்ஷம் தெரிந்தால் தரித் திருக்கலாமென்பது கருத்து.

இம்மஹான் இப்பாசுரத்தில் கூறியுள்ளதை ஸங் கரகிப்போம்.

1. இவ்வுலகங்களாய்க் காண்பதெல்லாம் லயித்துப் போகின்றன. இதுவே வானசாஸ்திரிகளின் கொள்கை Professor Eddington.

2. புதிதாக லோகங்கள் சிருஷ்டிக்கட்படுகின்றன. இதுவும் மேல்படியார் சம்மதம்.

3. இவ்வுலகங்களின் ஆவரணங்கள் பஞ்சபூத சூக்ஷமங்கள், Hydrogen, oxygen etc, இங்கு ஸ்ரீ விஷ்ணுபுராணத்தில் முதலில் ஒன்று வியக்தமென் றும், manifested worlds, இரண்டு அவ்வியக்த மென்றும், Nebullae இரண்டாவதின் துவாசமாய் முதல் வியக்தம் உத்பவிக்கிறதென்றும் சிருஷ்டி வர லாறு கூறுவதை ஞாபகத்தில் வைத்தல் வேண்டும். இதுவே வானசாஸ்திர தத்துவர்களின் ஊஹம்.

4. இவ்வுலகத்தில் காண்கின்ற பஞ்சபூத சூக்ஷமங் களைக் கொண்டே மற்ற,சூரிய சந்திர பிரகஸ்பதி சனி கோள்கள்முதல் பிரம்மலோகம் வரையில் அமைக்கப் பட்டுள.

All the heavenly bodies are built up from the same material as are found in our earth—iron, hydrogen, sodium carbon etcetra. There is a wonderful unity or oneness in the entire universe and the thought comes to us that it is constructed according to a definite intelligent plan—Extract from "our wonderful universe" by C. A. Chant.

5. இப்பிரம்மாண்டம் எவ்வளவு விஸ்தீர்ணமுள்ள தாயினும் ஒரு முட்டைவடிவம்போல் எல்லை வரை யறுத்துக் கட்டுபட்டுள்ளது.

The 220,000 light years—(Note:—in one light year light travels 98024400000 miles from a given point) which formed the character of the galactic (galaxy—milky way) system seemed increasingly large at first—(in late years), but we are now speaking of distances some six hundred times greater". Yet it does not mean that there is no limit to space. Dr. Einstein "claims to have established that space also though unlimited is finite". Space like a sphere bends back upon itself and it is probable that light can travel round the whole of space and return to its starting point; but the process is long, occupying thousands of

millions of light years"-Extract from the Contemporary Review, November 1922 p p 663 and 664. reviewing sir James Jeans' book, The Universe around us.

6. இப்பிரம்மாண்டம் கழிந்தால் கொழும் ஜோதிஸ் உயரத்தில் இருப்பதாக இம்மஹான் குறிக்கிருர். இதை வேதாந்திகள் தத்தஸத்வமென்று கூறுகிருர் கள். இம்மாஹாநுபாவன் மனதில் தோன்றியது ஜோதிர்மயமே. பிரம்மாண்டத்தின் சிற்சிலஅம்சங்கள் ஜோதிஸ் மயமாக இலங்குகின்றனவாய் இருக்க அமையும். இதை வானசாஸ்திரக்காரர் ஒப்புக் கொண்டு மேல் எல்லா அண்டங்களும் ஒரு கால விசேஷத்தில் ஜோதிர்மயமாகவே சென்றுபோகக் கிடப்பதென்று ஊஹிக்கிருர்கள். இங்ஙனம் வான சாஸ்திரிகள் கூறும் ஜோதிர்மய அம்சங்கள் பிரம் மாண்டத்தின் அகத்தினுற்றன. அந்த ஜோதி அதிக் கிரமித்து வெளியாயும் சத்துவ ஸத்தில்பட்டுக் கண் ணுடியில் ஸூரியரச்மிபோல் பிரதிபிம்பஒளி வேறு பிரதேசத்திலும் இலகுகின்றதோ என்று நாம் எண்ணமிடலாம்.

"It seems as if in time the whole universe will dissolve in radiation emitting light—p 664 the Contemporary Review above quoted.

7. இவ்வெல்லாப் பிரம்மாண்டத்தையும் கழித்து ஒருதனி மாத்தெய்வம் உருவமாகி அளிக்கவும் காக்க வும் நிற்கின்றான்.

(A) It also seems that these almost despairing efforts to understand the ultimate structure of the universe we see distinctly a personality at work keeping the universe alive." Professor James Jeans

(B) "We feel that there is an Infinite Mind behind the plan of the universe and controlling it." C. A. Chant—"our wonderful universe."

திருவாய்மொழி—சில தத்துவ விசாரம்.

நாம் முன்ஞெரு வியாஸத்தில் இவ்வாழ்வார் ஸர்வ சூன்யவாதத்தைக் கண்டித்துள்ளார் என்று சொன்னேம். வியாஸபகவான் பிரம்மசூத்திரம் 2-ம் அத்தியாயம் இரண்டாம் பாதம் 32வது சூத்திரம் ஸர்வசூன்ய வாதிகளைக் கண்டித்திருக்கிறது. இதைத் தொடர்ந்து இவ்வாழ்வாரும் 1-ம்பத்து 1-ம் திருவாய் மொழியில் 9-ம்பாசுரத்தில் ஸர்வசூனிய வாதத்தைக் கண்டித்துளார். தர்க்கமுறையில் பூர்வ பக்ஷத்தை, அதாவது ஆக்ஷேபம் செய்கிறவனுடைய கொள் கையை, விளக்குவதின்பொருட்டு ஆக்ஷேபிக்கிற வனைக் கேட்பதுபோல் "உன் பிரிதிஞ்ஞை என்ன? ஈசுவரன் இருக்கிருனென்ருு? இல்லையென்ருு? இருக் கிருனென்று ஒப்புக்கொண்டால் அப்போது அவன் உளன் என்கிற குணத்தோடு இருக்கிருனென்று அமையும். அவன் "இலன்" என்ருல், அவன் இல்லை என்ற விசேஷணத்தோடு உளன் என்ருகும். அடி தொட்டு அவன் "இல்லவே இல்லை என்று கூற ஏலாது." நாமரூபங்கள் குணங்கள் உள்ள வஸ் துக்களைப்பற்றியே மானுடரின் மனப்பகுதி, பா ஷைக்கு இலக்காய் இருக்கிறதென்றும் இல்லையென் றும் அறியத் தகும். நாமரூபம் முதலியவைகள் இல்லாத ஒரு பொருளைப்பற்றி என்ன நினைக்க இருக்கிறது? என்னகூற உண்டு? ஆகையால் அப்படி யுள்ளவிஷயங்களில் மானுடரின் ஞானம் சூன்னியமே தவிர பொருள்சூன்யம் கூற ஏலாது. நடைப்புள்ள வஸ்துக்களைப்பற்றி "உள" "இல" என்ருல் காலதேச வர்த்தமானத்தில் அவைகள் இருப்பதையும் இல் லாததையும் குறிக்குமே தவிர அவைகளின் ஸர்வதா (அதாவது எப்போதுமுள்ள) சுபாவத்தைக் கூறமுடி யாது. ஏதேனும் அபாவத்தைக் கூறினுல் இக்காலத் தில் இல்லை, இத்தேசத்தில் இல்லை, இவ்வர்த்தமான தசையில் இல்லை, இது போன்ற அபேக்ஷிதங்க ளென்று ஸம்சயிக்க வாய்ந்த இடத்தில் அவை இல்லை என்று கூறுதலுக்குமாத்திரம் வாய்க்குமே தவிர, அடியோடே அவற்றின் அபாவம் கூறத்தக்க தன்று. "முயல் கொம்பு" இல்லை என்ருல் முயலிடத் தில் கொம்புஇல்லை; கொம்பிடத்தில் முயலில்லை, என்று கூற சாத்தியமேஅன்றி, முயலில்லை கொம் பில்லை என்று சொல்லச் சாத்தியமில்லை. மானிட பாஷை, வர்த்தமான வஸ்துக்களின் கோசரத்தைக் காட்ட ஏற்பட்டிருக்கிறது. அபாவ வஸ்துவைக் குறிக்கஏலாததினுல் மானிடபாஷை அவற்றைப்பற்றி ஒன்றும் சொல்லவல்லதன்று. இதுபோலவே மானிட பாஷையால் சொல்லபட்ட வஸ்துக்களின் பாவம் அபாவம் இவைகளும் மேற்கூறிய உதாஹரண முறைப்படி விளக்கிக்கொள்ள வேணுமேதவிர வே றில்லை. மேல்கண்ட 9-ம் பாசுரத்தில் இதைச் செப்பி மேல் போந்து "முதலில் இப்பிரபஞ்சம் அஸத்தாயி ருந்தது; பிறகு அதினின்றும் ஸத்தாய்உண்டாயிற்று" என்றவேதவாக்கியத்துக்குத்தாம் அர்த்தம் கூறுகிருர். 'இருந்தது' "உண்டாயிற்று" என்கிறதெல்லாம் அவ ஸ்தாவிசேஷங்களைக்குறிப்பிடுகிறதென்றும் ஈசன் அடி யில் நாமரூப குணங்களால் விவகரிக்கக்கூடிய அவஸ் தையில் ஒருகாலத்தில் இல்லாமலிருந்தான், பிறகு வெகுபிரகாசங்களாய்த் தனக்குத்தானே விஸ்தரித்து வெளிப்பட்டான்" என்றும், இவ்வளவே 'அஸ த்து" "இல்லாமை" என்ற பதத்துக்கு நாமரூப மின்மையே ஈசுவர விஷயத்தில் மேற்கூறிய வாக்கியத் துக்கு இலக்கென்றும், முதல்பகுதி ஸூக்ஷம தசை யையும், வாக்கியத்தின் பிற்பகுதி ஸ்தூலதசையை யும் குறிப்பதாக நிர்வஹித்து "அருவம், ஸூக்ஷமம் 'உருவம்', வெளித்தோன்றல்" என்ற பதங்களால் மேற்படி பாசுரத்தில் வேத வாக்கியத்தின் பொருளை விளக்குகின்ருர். இதுவே, மேல்கூறிய வியாஸ சூத்தி ரத்தின் நிர்வாஹமென்று அறிவுளோர் கூறுகின்ருர் கள்.

அறுபத்து மூன்று நாயன்மார் சரித்திர உண்மை.

iii. சிவனடியார்களால் கலிநீங்கல்

சிவபெருமானுக்கு அரசர்கள் பற்பல காரணங்களால் பல வேலி நிலங்களைக் கொடுத்தாரென்பதற்குச் சுந்தரர்தேவாரம் மாத்திரமன்றிச்சிற் சில தலத்துள்ள சிலாசாசனங்களும், செப்பேடுகளும் இக்காலத்தில் சான்றாகக் கிடைக்கின்றன. நமது முன்னோர்கள் ஓலையில் எழுதியதைப் பொய் யென்பவர் கல்லில் எழுதியதும் கட்டுக்கதை யென்று சொல்லக்கூடும். இப்போது வேள்விக்குடிச் சாசனம் ஒன்று வெளியாகிக் கல்விமான்களுடைய மனதைக் கவர்வதுடன், அபிப்பிராயபேதத்திற்கும் ஆராய்ச்சிக்கும் இடங்கொடுக்கின்றது. வேள்வி முதலியன சரிவர நடக்க வேள்விக்குடி க்ரான்ட் (Grant) என்னும் சாசனத்தைச் சர்க்கார் வெளியிட்டிருப்பது யாவரும் அறிந்த விஷயமே. அதன் கால நிர்ணயம், பௌத்த சமண மதங்கள் அழிந்த காலமென்றே கொள்ளல்வேண்டும். அரசியல் நிலைகுலைந்து, உலகம் தாறுமாறாய்ச் சம்பந்தர் அப்பர் இவர்கள் காலத்திற்கு முன்பு தமிழ்நாடு தத்தளித்ததென்றும், அத்தடுமாற்றங்களும் குழப்பங்களும் ஒழிக்க வந்ததுபோல் பல நாயனார்கள் திருவவதாரம் தமிழ் நாட்டிற் செய்தார்களென்றும், அநுமானிக்கத்தக்க விஷயங்கள் பெரிய புராணத்திலும் தேவாரத் திருமுறைகளிலும் காண்கின்றோம் :—

49-வது பக்கத் தொடர்ச்சி

"கற்றாங் கெரியோம்பிக் கலியை வாராமே
செற்றார் வாழ்தில்லைச் சிற்றம்பல மேய
முற்றா வெண்டிங்கண் முதல்வன் பாதமே
பற்றா நின்றாரைப் பற்றா பாவமே"

என்று சம்பந்தரும்,

வஞ்சித்தென் வளைகவர்ந்தான் வாரானே யாயிடினும்
பஞ்சிக்காற் சிறகன்னம் பரந்தார்க்கும் பழனத்தான்
அஞ்சிப்போய்க் கலிமெலிய வழலோம்பு மப்பூதி
குஞ்சிப்பூ வாய்நின்ற சேவடியாய் கோடியையே!

என்று அப்பரும் பாடிய பாடல்களில் கலி யென்பது என்னவென்று ஆராய்வோமாகில் அது, துன்பம் மயக்கம் அஞ்ஞானம் முதலாய குணங்களைக் காட்டுவதென்று கொள்ளுதல் உசிதமாகாது. கலி மெலிந்து அஞ்சிப்போவதற்கு அழலோம்புவது அவசியமென்றும் அதற்கு இடம்பொருளேவல் முதலிய சாதனங்கள் இருக்கவேண்டுமென்றும் சில குறிப்புகள் தேவாரத்தில் காண்கின்றோம்.

"செல்வநெடு மாடஞ் சென்றுசே ணோங்கிச்
செல்வமதி தோயச் செல்வமுயர் கின்ற
செல்வர்வாழ் தில்லையே

கற்றாங்கெரியோம்பிக் கலியை வாராமே செற்றார்வாழ் தில்லையாம். வேள்விக்குடிச் சாசனம் முதலியசான்றுகளால், கலியரென்பவர் தெய்வமுண்டென்னும் அச்சமின்றி உலோகாயதச் சாருவாகர்களாய்த் திரிந்து தேசத்தை நாசஞ்செய்த மறவர், தமக்குரிய பாலை குறிஞ்சி நிலங்களிற் றங்காது, அரசியல் நிலைகுலைந்த காலத்தில் முல்லை மருதங்களிலும் பிரவேசித்து, நகரங்களையும் ஊர்களையும் பாழாக்கிவந்ததாகத் தெரியவருகின்றது. அக்காலத்தில் திருவவதாரஞ் செய்த சிவனடியார்கள் சுத்தவீரர்களா யிருந்தமையால் துஷ்ட நிக்கிரஹ சிஷ்டபரிபாலனஞ் செய்து சன்மார்க்கத்தை ஆங்காங்கு நிலைநிறுத்த லாயினர். அதனாலேயே, சம்பந்தர்காலத்திற் சைவசமயத்திற்குத் திருநெறி யென்னும் பெயர்தவிர வேறுபெயர் இல்லை.*

மேற்கண்ட கலியர்களை ஒழித்தவர்கள் மிகவும் வலியவர்கள் என்பதற்கும் அவர்கள் ஊர் சாமானியமானதன்று என்பதற்கும் சம்பந்தர் தேவாரம் :—

கலிகெழு பாரிடை யூரென வுளதாங்
கழுமலம் † விரும்பிய கோயில்கொண் டவர்மேல்
வலிகெழு மனமிக வைத்தவன் மறைசேர்
வருங்கலை ஞானசம் பந்தன் தமிழின்
ஒலிகெழு மாலையென் றுரைசெய்த பத்து
முண்மையி னுனிநினைந் தேத்தவல் லார்மேல்
மெலிகெழு துயரடை யாவினை சிந்தும்
விண்ணவ ராற்றலின் மிகப்பெறு வாரே!

யென்பதனால், "கலிகெழுபாரில்" ஊர் என்று தலையெடுத்துக் காட்டியது கழுமலம் ஒன்றுதான் என்றனர் புகலிவேந்தர். இவ்வாறு கலியர் இடையே துன்பப்பட்டு வருந்திய தமிழ்நாடு சீருற உழைத்தவர்கள் சிவனடியார்களாதலால் அவர்களை வரவேற்பதும் அவர்களுக்கு அன்னமிடுவதுமே வையகம் போற்றும் மனையறமென்று அக்காலத்தில் கொள்ளப்பட்டது. $ ஆதலால் எக்குலத்தாரா யிருந்தாலும் சிவனடியாரைப் பிறப்பைநோக்காது ஒழுக்கத்தையே நோக்கி வரவேற்றலும், வரும் அடியார் அந்தணராயிருப்பினும், யாத்திரை செல்லும் தலங்களிலுள்ள இல்லறவாசிகளான சிவனடியார்கள் வீட்டில் குலத்தைக் கவனியாது அவரிடம் உணவேற்றலும், அக்காலத்து வழக்கமா யிருந்ததால், சைவர்களில் அன்பு நிறைந்து, ஒற்றுமையேற்பட்டு, ஒட்டிட்டபண்பாய், உருத்திர பல்கணத்தாராலேயே தமிழ்நாட்டில் கலி நீங்கலாயிற்று.

iv. சிவனடியார்கள் புறங்காட்டாப் போர்வீரர்கள்.

சிவனடியார்கள் சுத்தவீரர்களாய் இருந்தனர் என்பதற்கு அத்தாட்சி இயற்பகைநாயனார் புராணமாம். இவர் இருந்த நகரம் சிலப்பதிகாரத்தில் காணப்படும் புகார் நகரம். இயற்பகைநாயனார் காவிரிப்பூம் பட்டினச் செட்டிமக்களிற் சிறந்தவர். கம்பன் காலத்திலும் அதற்குப் பின்னரும் இருந்த செட்டிமக்களைப்

* அருநெ றியமறை வல்ல முனியகன் பொய்கையலர்மேய
பெருநெ றியபிர மாபுர மேவியபெம்மா னிவன் றன்னை
ஒருநெ றியமனம் வைத்துணர் ஞானசம்பந் தனுரை செய்த
திருநெ றியதமிழ் வல்லவர் தொல்வினை தீர்த லெளிதாமே

† இப்பாசுரம் முதல்திருமுறையில் கற்றாங்கெரி யோம்பி என்னும் பாசுரத்திற்கு முன்னிற்கும் பதிகமாகும். பண்முறையில் காண்க.

$ பொய்கடிர் தறத்தின் வாழ்வார் புனற்சடை முடியார்க் [கன்பர்
மெய்யடி யார்கட் கான பணிசெய்யும் விருப்பி னின்று
வையகம் போற்றும் செய்கை மனையறம் புரிந்து வாழ்வார்
சைவமெய்த் திருவின் சார்வே பொருளெனச் சாரு நீரார்.
திருநீலகண்ட நாயனார் புராணம்—2

போன்றவரல்லர் *இவர் முதற்றரமான வள்ளல்; இதனாலேயோ இப் புகார்நகரைச் சேர்ந்த திருச்சாய்க் காட்டைச் சம்பந்தர் பாடியபோது இவ்வள்ளல் வாசனையை யெண்ணினார் போலும்.

மண்புகார் வான்புகுவர் மனமிளையார் பசியாலுங்
கண்புகார் பிணியறியார் கற்றாருங் கேட்டாரும்
விண்புகா ரெனவேண்டா வெண்மாட நெடுவீதித்
தண்புகார்ச் சாய்க்காட்டெந் தலைவன்றாள் சார்ந் [தாரே

செட்டிக்குலத்தில் பிறந்த இயற்பகைக்கும்; ‡இளையான்றன் குடிமாறனுக்கும் ஈகைத்தன்மையில் யாதொரு பேதமில்லை. இயற்பகைநாயனார் அடியார்க்கு மனைவியை ஈந்தனர்; இளையான்குடிமாறன் மாரிக்காலத்து இரவில் அடியார்க்கு ஈரமேனியை நீக்கி இடங்கொடுத்து மின்னல் வெளிச்சத்தில் வெண்முளை, வாரி வந்து அமுதூட்டினர். மெய்ப்பொருளோ, தன்னைக்கொன்ற தத்தன்மேல் பழிக்குப் பழி வாங்காது

அரசிய லாயத் தார்க்கு மழிவுறுங் காத லார்க்கும்
விரவிய செய்கை தன்னை விளம்புவார் விதியி னாலே
பரவிய திருநீற் றன்பு பாதுகாத் துய்ப்பீ ரென்று
புரவலன் மன்று ளாடும் பூங்கழல் சிந்தை செய்தார்.

* கலியநாயனார் தயிலவினைத்தொழின் மரபினரன்றோ? கம்பர் காலத்தில் இக்குலத்தோரும் ஏனையோர்போல் திருநெறி மறந்தனர் போலும்.

செட்டிமக்கள் வாசல்வழிச் செல்லாமோ செக்காரப்
பொட்டிமக்கள் வாசல்வழிப் போகோமே-முட்டிப்புகும்
பார்ப்பா ரகத்தையெட்டிப் பாரோமே யெந்நாளும்
காப்பாரே வேளாளர் காண்.

‡ இவர்காலம் கோவலன் காலத்திற்கு முற்பட்டது எனலாம். ஏனெனில் கோவலன் காலத்திற்குப் பின்னர்ப் புகார் நகரத்தைக் கடல்கொண்டதால் அதைச்சார்ந்த சாய்க்காடே எஞ்சி நின்றது.

இயற்பகைநாயனாரைப்போல், வணிகர் குலத்தினில் வந்தார் அமர்நீதியார். இவர் 'மலர்மிசை யயனுமாலுங் காணுதற் கரியவள்ளல்.' இவர் தேவாரத்தில் மொழியப்பட்டிருக்கின்றனர்.

நம்பியாரூரர் காலத்தவராகிய சேரமான்பெருமானுடன் ஒப்பிட்டுக் காணக்கூடியவர்கள் ஏயர்கோன் கலிக்காமன் நாயனார் ஒன்று, கோட்புலிநாயனார் இரண்டு, தஞ்சை மன்னவனும் செருத்துணை மூன்று, அதிபத்தநாயனார் நான்கு, கழற்சிங்க நாயனார் ஐந்து, விறன்மிண்ட நாயனார் ஆறு, ஆக இவர்களாம். வன்றொண்டர் செய்கை ஆமோதிக்காது சிலகாலம் அவரைப் பகைத்துப் பிறகு மனம்ஒத்து அன்பிற்கலந்த ஏயர்கோன்கலிக்காமன் என்பவரும் ஒரு அரசனே. ஏயர்கோன் கலிக்காமன், மானக்கஞ்சாறநாயனார் மருமகனாகும். அவர் திருமகளையே இவர் மணந்தார். மணப்பெண் கூந்தலைத் தந்தையார் கொடுத்த சரிதை பெரியபுராணத்தில் மிக விவரமாய்க் கண்டிருக்கின்றது. ஆகையால் மானக்கஞ்சாறநாயனாரும் சுந்தரமூர்த்தி நாயனார் காலத்தவர், என்று கொள்ளல்வேண்டும். விறன்மிண்டர் ஒரு சிற்றரசனாகவே காணப்படுகின்றனர். அதிபத்தநாயனார் நாகப்பட்டணத்தில் நெய்தல்நிலமன்னனாய்க் குப்பங்களில் அரசு நடாத்தி வந்தனர். ஆயினும் இவர் சுந்தரர் காலத்தில் இருந்தவராகக் காணப்படவில்லை ஏனெனில் இவர் பாடிய திருக்கடனாகைக்காரோணத் திருப்பதிகத்தில் அதிபத்தரைப்பற்றி யாதொரு விஷயமும் காணப்படவில்லை. பெரியபுராணத்தில் இவர் அதிபத்தரைத் தரிசித்ததாகச் சொல்லப்படவில்லை. இத்திருப்பதியில் சம்பந்தரும் அப்பரும் பாடிய பதிகத்திலும் அதிபத்தர் விஷயம் கண்டிராமையால் அதிபத்தநாயனார் காலம் சம்பந்தருக்குப் பிற்பட்டதும் சுந்தரருக்கு முற்பட்டதுமென்று அநுமானிக்கலாம்.

தமிழ்ப் பாடம் 106.

வில்லி பாரதம்—உத்தியோக பருவம்

கிருஷ்ணன் தூதுச் சருக்கம்.

48-வது பக்கத் தொடர்ச்சி

செஞ்சொன்முனி சஞ்சயனுக் கியாமுரைத்த
கருமமுமுன் சென்ற காலை
அஞ்சொன்முனி புரோகிதனுக் கவனிசைத்த
கருமமுநீ யறிதி யன்றே
நஞ்சுதனை மிகவருந்தி நன்மருந்து
மந்திரமு விரைந்து நாடா
தெஞ்சினர்தங் களைப்போல விருக்குமதோ
யார்மனத்து மிருக்குஞ் சோதி. (2)

பதவுரை.

யார்மனத்தும் - எத்தகையவருடைய மனத்திலும், இருக்கும் - தங்கியிருக்கின்ற, சோதீ - பேரொளியாகிய கிருஷ்ணனே !-

செம் - செம்மையான, சொல் - மொழிகளைப் பேசும், முனி சஞ்சயனுக்கு - சஞ்சயமுனிவனுக்கு, யாம் - நாம், உரைத்த - சொல்லியனுப்பிய, கருமமும் - செய்தியும்; முன் - முதலில், சென்றகாலை போனபோது, அம் - அழகிய, சொல் - சொற்களையுடைய, முனி புரோகிதனுக்கு - புரோகிதனை உலூக முனிவனுக்கு, அவன் - துரியோதனன், இசைத்த - சொன்ன, கருமமும் - செய்தியும், நீ - நீ, அறிதி அன்றோ - அறிவாய் அன்றே! (ஆதலால்)

நஞ்சுதனை - விஷத்தை, மிக அருந்தி - அதிகமாகக் குடித்துவிட்டால், (அதனைப்போக்க) நல் மருந்தும் - நல்ல மருந்துகளையும், மந்திரமும் - மந்திரங்களையும், விரைந்து-விரைவாக, நாடாது - தேடாமல், எஞ்சினர்தங்களைப் போல் - கேடு அடைந்தவர்களைப் போல், இருக்கும் அது ஓ - நாமும் இருப்பது தகுதி ஆகுமோ!— (என்றான் தருமன்)

குறிப்பு:—சஞ்சயனுக்கு + யாம் = சஞ்சயனுக்கியாம், என இச்செய்யுளில், நிலைமொழி யீற்றுக் குற்றியலுகரம் வருமொழி முதலில் யகரம் வந்ததால், குற்றியலிகரமாய்த் திரிந்தது.

அருஞ்சமரம் புரியும்வகை யவருரைத்தா
ராலுை மறமொன் றின்றிப்
பெருஞ்சமரம் விளைக்குமது கடனன்றென்
றருள்வெள்ளம் பெருகக் கூறும்
பொருஞ்சமர நெடுமுரசப் பூங்கொடியோன்
தனைநோக்கிப் புயப்போர் வாணன்
இருஞ்சமரந் தொலைத்தபிரா னிளைஞரையு
முடனிருத்தி யியம்பு வானே. (3)

பதவுரை.

அவர் - துரியோதனுதியர், அரும் - செய்வதற்கரிய, சமரம் - யுத்தத்தை, புரியும்வகை - செய்யும்படி, உரைத்தார் ஆனுலும் - சொன்ன போதிலும், (நாம்), அறம் ஒன்று இன்றி - சிறிதும் தர்மம் இல்லாமல், பெரும் - பெரிய, சமரம் - சண்டையை, விளைக்கும் அது - உண்டாக்குவது, கடன் அன்று - நீதி ஆகாது, என்று - என்று, அருள் வெள்ளம் - கருணையாகிய - வெள்ளம், பெருக பெருகினவனுய், கூறும் - சொன்ன,

பொரும் - மோதுகின்ற, சமரம் - யுத்தத்திற்குரிய, நெடு - பெரிய, முரசம் - பேரிகையின் வடிவத்தை எழுதியுள்ள, பூ - அழகிய, கொடியோன்தன்னை - கொடியை உடைய தருமபுத்திரனை,

புயம் - ஆயிரம் கைகளால், போர் - போர் செய்யும், வாணன் - பாணுசுரனது, இரும் - பெரிய, சமரம் - யுத்தத்தை, தொலைத்த - அழித்த, பிரான் - கண்ணபிரான், நோக்கி - பார்த்து, இளைஞரையும் - அவன் தம்பியரையும், உடன்இருத்தி - கூட இருக்கச்செய்து, இயம்புவான் - பின்வருமாறு சொல்லலானுன்.

விளக்கம்:—கடன் அன்று என்று கூறும் பூங்கொடியோனை நோக்கி, வாணன் இருஞ்சரம் தொலைத்தபிரான், இளைஞரையும் உடன் இருத்தி இயம்புவான், என இச்செய்யுள் அந்வயமாகும்

விரிவுரை:—கிருஷ்ணன் வாணுசுரனுடன் பொருது அவனை அடக்கிய கதை பின்வருமாறு :—பலிசக்ரவர்த்தியின் முதன்மைந்தனுன பாணுசுரன் (வாணுசுரன் என்பதும் ஒன்று) பரமசிவனைப் பூஜித்துப்பல பெரும்வரங்களைப் பெற்றுச் சோணிதபுரியில் அரசுவிளங்குகையில், அவனது மகள் உஷை என்பாள் கனவிற்கண்ட ஒரு கட்டழகனைக் காமுற்று, அன்னுன், கண்ணனது பேரனும், பிரத்யுமனனது புத்திரனுமாகிய அநிருத்தன் என்பதை அவள்தோழி சித்ரலேகை வரைந்துகாட்டிய சித்திரத்தினு லுணர்ந்து, அத்தோழியின் உதவியாலேயே துவாரகையில்துயின்றிருந்த அவனைக் கட்டிலுடன் கொணர்வித்துத் தன் கன்னிமாடத்தில் ஒருவரு மறியாமல் அவனேடு சில காலம் மகிழ்ந்திருந்தாள். கண்ணனுடன் வழிப்பகை கொண்டிருந்த அவள் தந்தை, இது உணரவும் அடங்காச்சீற்றங்கொண்டு அநிருத்தனைக் கொல்லக்கருதித் தன்சேனையோடும் பொருங்கால், தனியாயகப்பட்ட அவ்விளவல் கதவின் தாழ்கோலல்லால் வேறோர் படைக்கலமுமின்றி நெடுநேரம் தற்காத்திருக்கவும், இறுதியில் வாணன் அவனை நாகாஸ்திரத்தால் கட்டிவிட்டனன். நாரதனுல் இதனை அறிந்த கிருஷ்ணன் துவாரகையிலிருந்து விரைவி லங்குவந்து, பாணுசுரனை வென்று, சிவபிரான் வேண்டுகோளிற்கிணங்கி அவன் உயிரையும் கரங்களில் நான்கையும் வாங்காது விட்டனன்.

செய்வா லினமுகளுந் திருநாடு
பெறநினைவோ சென்று மீளப்
பைவரா யருங்கானிற் பயின்றுதிரி
தரநினைவோ பகைத்த போரி
லுய்வா ரெனவிரைவி னுருத்தெழுந்து
பொரநினைவோ வுண்மை யாக
ஐவரா மவனிபர்க்கு நினைவேதென்
றருள்புரிந்தா னமரர் கோமான் (4)

பதவுரை.

செய் - வயல்களில், வரால் இனம் - வரால்மீனின் கூட்டங்கள், உகளும் - துள்ளுகின்ற, திரு - அழகிய, நாடு - உங்களுடைய நாட்டினை, பெற - (எவ்விதத்திலாகிலும் நீங்கள் மறுபடி) அடையவேண்டும் என்பது, நினைவோ - எண்ணமோ ? (அல்லது)

மீளச்சென்று - மறுபடி போய், பைவர் ஆய் - நொந்தவர்களாய், அரும் கானில் - வசித்தற்கு அருமையான காட்டில், பயின்று - சஞ்சரித்து, திரிதர - அலைந்து திரிய, நினைவோ - எண்ணமோ ? (அல்லது) பகைத்த - பகையால் விளைகின்ற, போரில் - சண்டையில், "உய்வர் ஆர்"என - நீ பிழைக்கின்றுயோ, நான் பிழைக்கின்றேனே பார்ப்போம் என்று இருவரில் ஒருவர் மடியும்மட்டும் போர் முடிப்பதில்லை எனத் துணிந்து, விரைவின் - வேகமாக, உருத்து எழுந்து - கோபித்து எழுந்து, பொர - கௌரவர்களுடன் போர்செய்ய, நினைவோ - எண்ணமோ !

ஐவர் ஆம் அவனிபர்க்கு - அரசர்களாகிய உங்கள் ஐந்துபேருக்கும், உண்மை ஆக - மெய்யாக, நினைவு ஏது - கருத்து யாது, என்று - என்று, அமரர்கோமான் - தேவர்களுக்குத் தலைவனுன கண்ணன், அருள் புரிந்தான் - கேட்டருளினுன்.

இலக்கணம்

III. B. நிலைமொழியிறுதி உகரமாகவும் வருமொழிமுதல் யகரமெய்யாகவும் நிற்குமானுல், என்னுகும் என்று பார்ப்போம்.

i. இவ்விறுதி உகரம் குற்றியலுகரமாயின், வருமொழிமுதல் யகரமெய்யோடு அது புணரும்போது, (உயிரொடு புணர்வதுபோன்றே, வால்யூம் 2, பக்கம்) அக்குற்றியலுகரம், கெட்டுவிடும். ஆனுல், அதற்குப் பதில் ஒரு இகரந்தோன்றி முன்குற்றியலுகரம் விட்டு விட்டுப்போன நிலைமொழியீற்று மெய்யின்மேல் ஏறிக் கொள்ளும்.

முரசு + யாது = முரச் உ + யாது = முரச் + யாது
= முரச் இ + யாது = முரசியாது.

கொக்கு + யாது = கொக்க் உ + யாது = கொக்க் + யாது = கொக்க இ + யாது = கொக்கியாது.

[அல்லது, குற்றியலுகரம் கெட்டு, இகரம் தோன்றியது என்பதற்குப் பதிலாய், அக்குற்றியலுகரமே இகரமாய்த் திரிந்தது என்று சொல்லினும் சொல்லலாம்—பின்வரும் விதியைக் கருதுங்கால் இவ்வாறு திரிகின்றதெனச் சொல்வதே தக்கதாகலாம்.]

ii. (a) இவ்விறுதி உகரம், முற்றிய லுகரமாயின் வருமொழிமுதலில் யகரம் வரின் பெரும்பான்மை இகரமாகத்திரியாமல், இயல்பாக அப்படியே இருந்து விடும்.

கொலு + யாது = கொலு யாது
பசு + யாது = பசு யாது.
சாம்பு + யாது = சம்புயாது:-(சாம்பு = பறை: இது வடமொழியாதலால், ஈற்றுகரம் குற்றியலுகரமன்று. ஆதலால் இகரமாகத் திரியவில்லை)

(b) எனினும், கதவு வரவு நிலவு என்பனபோல் அவ்வுகரம் வகரமெய்யின்மேல் ஏறிமுடிகின்ற முற்றியலுகரமாயின், வருமொழிமுதலில் யகரம்வர, அதுவும் குற்றியலுகரம் போலவே இகரமாகத்திரிகின்றது.

(உ - ம்) வரவு + யாது = வரவ்உ + யாது = வரவ் + யாது = வரவ் இ + யாது = வரவியாது.

கதவு + யாது = கதவியாது.

[குறிப்பு:—குற்றியலுகரமாயினும், கதவு வரவு என்பனபோல் வகரமெய்யில் ஏறிமுடிகின்ற முற்றியலுகரமாயினும் வருமொழிமுதலில் யகரம் வந்தால் மாத்திரமே இகரமாகத் திரியுமேயல்லாது, வேறு எந்த மெய்யெழுத்து வருமொழி முதலில் வந்தாலும் இகரமாகத்திரியாது. பெரிது + பூனை = பெரிது பூனை; உழவு + மாடு = உழவுமாடு, என இயல்பாகவே யிருக்கும்]

[இப்படி, யகரம்வருவதால்குற்றியலுகரம்திரிந்துஆகின்ற இகரத்திற்குக் குற்றியலிகரம் என்றுபெயர் இஎன்னும் உயிரெழுத்து உச்சரிக்கின்ற அளவு ஒரு மாத்திரை. ஆனுல் அது இவ்விதம் குற்றியலுகரந் திரிந்ததால் உண்டான குற்றியலிகரமாகும்போது குற்றியலுகரம் போலவே, அரை மாத்திரை பெறுகின்றது. கத்தி, சொல்லி, என்பன போன்று இயல்பாக ஈற்றிலிருக்கின்ற இகரம் குற்றியலிகரம் அன்று. முன்சொன்ன விதியின்படி குற்றியலுகரம் திரிந்து ஈற்றில் நிற்கும் இகரம் குற்றியலிகரம். கேண்மியா, சொன்மியா, என வரும், மியா என்ற முன்னிலை அசை தமிழில் உளது. இம் மியா என்பதன் மகரத்தில் ஏறியிருக்கும் இகரமும் குற்றியலிகரம்.]

iii ட், ற் என்ற இரண்டு மெய்களின் மீது ஏறியுள்ள நெடிற்றொடர்க் குற்றியலுகரங்களும் உயிர்த்தொடர்க் குற்றியலுகரங்களும், வருமொழிமுதல் யகரமெய்யோடு புணரும்போது, அக்குற்றியலுகரம் குற்றியலிகரமாய்த் திரிவது மாத்திரமல்லாமல், உயிரோடு புணர்வது போன்றே—(2வது வால்யூம் 938 வது பக்கம்) அக்குற்றியலுகரம் ஏறியிருந்த டகர றகர மெய்களும் சிற்சில சமயம் இரட்டும்.

இவ்வாறு இரட்டுவதைப் பண்புத் தொகையிலும், ஆறும் வேற்றுமைத் தொகையிலும், மற்ற வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகைகளிலும் மட்டுமே காணலாம். மற்றத் தொடர்களில் அவை இரட்டுவதில்லை.

களிறு + யானை = களிற் உ + யானை = களிற் + யானை
= களிற் இ + யானை
= களிற்ற்இ + யானை
= களிற்றியானை. (களிறுகிய யானை என விரியுமாகையால், இது பண்புத் தொகை).

ஆறு + யாணர் = ஆற்றியாணர்– (ஆற்றினுடைய யாணர். ஆறும் வேற்றுமைத் தொகை) யாணர், என்பதற்கு அழகு என்பது அர்த்தம்.

காடு + யானை = காட்டியானை (காட்டில் வசிக்கும் யானை—ஏழாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை).

கோடு + யானை = கோட்டியானை — (இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை).

பகடு + யானை = பகட்டியானை(பண்புத்தொகை, மற்றத் தொடர்களில், உகரம் மாத்திரம் இகரமாய்த் திரியும். ஈற்று மெய் இரட்டாது.

(உ - ம்) களிறு + யாது = களிறியாது.
காடு + யாது = காடியாது.

[இவ்விதம், குற்றியலுகரம் குற்றியலிகரமாய்த் திரிந்து நிற்க இயலும் என்பதை நினைவில் வைத்துக்கொள்ளாவிட்டால் சிலசமயம் செய்யுள்களில் பொருள் உணரமாட்டாமல் திகைக்கவேண்டி யிருக்கும். முத்தியாது—என்று வந்திருக்குமாயின், அது மோக்ஷம் என்பது என்ன' என்று பொருள்படலாம்; அல்லது 'முத்து (தாளம்) எது' என்றும் பொருள்படலாம். முதல் பொருளில் 'முத்தி' என்பதே பதம். ஈற்றிலுள்ள இகரம் குற்றியலிகரமன்று. மற்றப் பொருளில் முத்து என்பது பதம். அதன் ஈற்றிலுள்ள குற்றியலுகரம், யகரத்தோடு புணர்வதால் இகரமாய்த் திரிந்து நிற்கின்றது.]

189088

இலஞ்சிப் பாவை.

4. கனுக் காணல்.

வேட்டதே காண்போங் கனுவென்னில் வெய்துறும்
காட்சியைக் காண்ப தெவன்.

53-வது பக்கத் தொடர்ச்சி.

இருப்போலி செவிப்படலும் மருப்புடை வேழ மன்ன வீரனும் வெகுண்டு வாளிற் கையிட்டு வல மிட நோக்கினுன். பட்டயமொன்று கலைமான் கொம்பிற் றாக்கிய உறையை நீத்து வழுவி நிலத்திடை வீழ்ந்திருக்கக் கண்டு, அரவத்தின் மூலத்தை யறிந்து, அவன் முகம் நாணுற்றது. அறையின் நாற்புறமும் போர்க்குரியனவும், வேட்டைக் குரியனவுமான கருவிகள் மலிந்துகிடந்தன. சுவர்களின்மேல் கேடய மொருபுறமும், ஊதுகுழை யொருபாலும், தோமர மொருசாரும், கணிச்சியொரு சிறையும், காண்போர் கண்களுக் கணிபெற வமைக்கப்பட் டிருந்தன. குந்தமொடும் சூலமோடும் விரவின வில்லும் அம்பும். கோடுடைக் கேழலின் சென்னி செறிந்த தோரிடை ; விளிவுழி வெளித்தோன்றிய எயிறுட னியைந்து நின்றது கோனுயின் கேசமோர்

புடை; காட்டு மேதியின் கடுஞ்சிர மிருந்ததோர்
மருங்கு. மலினமுற்ற பதாகைகளும், அறவோர்க்குரிய
அரிணத்தொக்கும், தலைமயங்கி வீரனை விம்மிதமடை
யச் செய்தன.

நாற்புறமும் நன்கு நோக்கிக் கீழ்க்கிடந்த பட்ட
யத்தைக் கைக்கொண்டவவ் வீரன் காலின் மைந்
தனுக்கும் கையாள வியலாதன போன்றிருந்த அத
னுருவமும் பருமனும் அமைந்தவாறு கண் டிறும்
பூதெய்தி, "இதனைப் போரிடை யேந்திச் சுழற்றவல்ல
பேராற்றலுடையான் இந்நாட்டில் ஒருவனே, அவனை
யன்றி அத்தகைய ஆற்றல் வாய்ந்தவனை நானெங்கும்
கண்ணுறவில்லை" என்றியம்பினன். 'எங்களைப் புரக்
கும் தெய்வத்தின் போர்வா ளிது. எனது கரத்திற்
சிறு துரும்பு எங்ஙனஞ் சுழலுமோ அதேபோ
லெமது காவற்றெய்வத்தின் கையி லிக்கத்தியும் சுற்
றும்; வெளிப்போந்துள்ள அரக்கரின் இல்லத்தி லிவ்
வமயம் இருப்பவர், பெண்களும் மூத்த பணியாள
ருமே" என்றுநெட்டுயிர்ப்புட னிசைத்தனளப்பாவை.
இதற்குள் அவ்வரணுக் குரிய இராதாகிருஷ்ண
னது தாயும் அவ்விடம் வந்தாள். மூத்த வயதுடை
யவ்வம்மையும் முன்னொருகால் ஓதிமமென்னலு துங்கி
யிருப்பளெனத் தோற்றுவித்த தவள்நடை. தாழ்ந்த
குரலும் அமர்ந்த சொற்களும் உயர்ந்த குலத்திற்
கேற்றவாயின. தாய்க்குரிய பணிவுடன் மாதும்
அவளை யெதிர்கொண்டாள். மாலினியெனப் பெயர்
கொண்டவவ் வம்மையும் மலர்ந்த முகத்துடன் விருந்
தினனை வரவேற்றாள். வந்தவன் இன்னானென வவர்
அறிய விரும்பிலர். அக்காலத்தில் அந்நாட்டில் விருந்
தினரை உபசரிப்பதொன்றே உயரிய கடமை. ஏதில
னாயினும், ஏதமிலானாயினும், தந்தையைத் தாயைத்
தமரைக் கொல்லிய வந்தானாயினும், விருந்தென்று
வருவானுக் குணவளித்தலும் வேண்டிய வுதவலும்
செல்வுழி யுவகையோடு செலுத்தலுமே அன்னார்
பயின்ற முறை. ஆகையால் வீரனும் அவர்களுக்குத்
தானே தன் வரலாற்றைக் கூறலாயினன்.

"என் பேர் விஜயன். எனது நாடும் சிறியதே.யான
தைப் பெற்றதுமுதல் போரிட்டே புரக்கவேண்
டியவனா யிருக்கிறேன். நமது நாடிருக்கும் நிலையில்
ஒருவன் ஓயாது போர்க்கோலங் கொண்டு திரிந்தா
லன்றி அவன் தன்னையும் தன்னைச் சேர்ந்தாரையும்
காக்க வியலாது. இன்றுகாலையில் அரசருடன் கூடி
வேட்டையாடி, மானைத்துரத்தித் துணைவரைப்பிரிந்து
இவ்விடம்போந்தனன். காட்டி லலைந்தேனியான், கடல
முதம் கிடைத்தாற்போ லிம்மாது மிப் புகலிடமும்
கிடைக்கப்பெற்றேன். இனியும்மை யின்னாரென வறிய
விரும்புகின்றேன்" என்னலும், மாதரிருவரில் முதி
யோள், "என் பேர் மாலினி. இச்சுரிகுழலாள் பெயர்
சுதஞ்சனை. நாங்கள் இக்காட்டி லுறைபவர். எங்
களுக்கு மலைகளே தெய்வங்களும் அரண்களும். நாட்
டின் வழிகளும் நடைகளும் எமக்குத் தெரியாதன"
என்றெதிர்விளம்பினள்.

வி—உமது தோற்றமும் சொல்லும் நீங்கள் மலை
நாட்டிலேயே எந்நாளும் உறைந்தவர்க ளல்லரென்
பதை யுரைக்கின்றனவே.

சு—நாங்கள் மாயக்காரிகள். நகரத்தைநீங்கிக் குன்
றிலும் குகையிலும் குடியிருப்போம். நீரிலோடுவோம்.
காற்றைக் கடிவாளமிட் டேறி யுகைத் தாருவோம்.
தனித்துவரும் வீரரைப் பொடியிட்டு மயக்குவோம்.
எம்மைச்சுற்றிக்காணுதுறையுங்கந்தருவர் வீணைமிழற்
றச் சிலவேளை யாம் பாடுவோம்"—என்று புகன்று
அமிழ்தினுமினிய குரலால் ஓர் பாட்டைப் பாடினள்.

அவள்பாட்டைப் பின்பற்றிக்கண்ணிற்காணுவொரு
வீணையும் மீட்டப்பட்டது. இன்னிசையி லீடுபட்ட
வீரனும், இவர் யாவரென வறிய விரும்பியதையும்,
அதற்கவர்கள் மாறுத்தரந் தாராமல் வேறுமொழி
புகன்றதையும், மாலினியின் தோற்றமும் மொழியும்
அவளது தற்கால நிலைமைக்கொவ்வாது சிறந்து
தோன்றினதையும், சுதஞ்சனை சற்றே மலைநாட்டி
னள் போன்றிருப்பினும் பல்வகையி லவ ளுயர்குலத்
தினளென்பது தோன்ற விருந்ததையும் அறவே மறந்
து அளவிலாக் களிப்பிலாழ்ந்தான். விரைவில் பாட்டும்
தன்னைப்பற்றியே பாடப்பட்டதென வுணர்ந்து
சற்றே செவிகொடுத்துக் கேட்டலும், அவன் காது
களிற் பின்வரும் பாடல்கள் புகுந்தன.

நற்புகழ் நாடியும் நாற்படை
சாடியு மெய்த்தவீர
பொற்புடை யிக்குடில் புக்குநின்
பேரிடர் மாய்ந்தொழிய
எற்பட ரெல்லை யயர்ந்திம்
மலையிடைக் கண்வளராய்
கற்பயில் தோளோய் கவற்சி
தவிர்ந்திங் குறங்குகவே!

வேடுவனே கண்வளராய் வெங்கானத்
திடைநிற்கு மிலஞ்சி வெற்பில்
பேடுடனே குனிகம்புள் புகழ்பாடக்
கேளாயோ புல்வா யொளிக்கக்
காடுதனிற் காலிடறிக் கந்துகமு
மடிந்திட்ட தினிநீ வேட்டை
நேடுவதி லென்னுளது நவைநீங்கி
நற்கனுக்கண் டுறங்கு நன்றே!

பாட்டு முடிந்ததும் பெண்க ளிருவரும் எழுந்து
தத்தம் பள்ளியறை சேர்ந்தனர். விஜயனுக்கு விழல்
வேய்ந்த அமளியொன்று வாய்த்தது. அதனிடைத்
தலைசாய்ந்துறங்க முயன்ற வீரனுக் குறக்கங் கொள்ள
வில்லை. நற்கனவுந் தீக்கனவும் விரவி யவன் துயிலுக்
கிடையூறு விளைத்தன. தான் குதிரைமீதேறிக் கான
கத்தில் துயருறுதல்போலும், ஏரியின்மேல் தோணி
கவிழத் தூநீரிடைக் கைகளலைத்து நீந்த முயன்
றழுந்துவது போலும், போரில் தோற்றுப் பகைவர்
துரத்தத் தன்படை யழிவதுபோலும் தோற்றிய
தொருகனா. கவலையற்ற காளைப்பருவத்திற் றுள்ளி
யாடுவதுபோலும், நண்பரெவரும் நல்லாசி கூறி
நகைப்பதுபோன்றும், பின்பவர் தன்னைத் தொலைக்க
வழிதேடிப் பொய்யுறவுகொண் டுறைவதுபோலும்
தோற்றிய தின்னொரு கனா. இறுதியில் சுதஞ்சனை
யுடன் சோலையிற் றிரிந்து தன்னுள்ளக் காதலை
யொளியாதுணர்த்த அவளும் நாணுடன் முகங்
கோட்டி நன்முறுவ லரும்பினளாய்த் தன் நளின
மலர்க் கை தீண்டலு மது இருப்புக்கையாய் மாறி
நிற்கவும், தலையில் கவசங்கொண்டு இருப்புச்சீரா
வுடுத்து, கடுஞ்சினங்கொண்ட வதனத்துடன் ஆணுகி
வுறுத்துவதுபோலும் வேறொரு கனாக்கண்டு திடுக்
கிட்டு விழித்து நாற்புறமும் நோக்கினான். நோக்

கிய கண்களுக்கு மங்கிய விளக்கொளியில் சுவ
ரில் தொங்கிய படைக்கருவிகளே சிலநாழி மனித
வுருக்கொண்டு தோன்றின. பின்னர்வேறெவரும் இல்
லாததுகண்டு தனது எண்ணங்கள் தன்னைமேய்த்தன
வென்றுணர்ந்து, நெடுநேரம் எண்ணமிட்டு விழித்
தான். விஜயனும் முடிவில் தன்னெளிமையை முனிந்
தெழுந்து புறம்போந்து, தூநிலவெங்கும் தண்ணொளி
பரப்பிய எண்ணருங்காட்சிகண்டு, நறுமலர்வீசும் நன்
மணமுகர்ந்து, பரந்த ஏரியில் நிறைந்த நிலாவெள்ளம்
தயங்கிய வழகுநோக்கித் தனதுள்ளம் அமைதியுறப்
பெற்றான். இங்குமங்கு முலவி "எனக்கேன் அவ்
வெண்ணம்? நாடுதுறந்த ஸ்ரீபாலன் தவிர வேறெவரும்
உலகத்திலில்லையோ? காட்டி லொரு கன்னிகையின்
கண்கள் ஸ்ரீபாலனது முகக்குறிப்பை யேனெனக்குத்
தோற்றுவிக்க வேண்டும்? பட்டயமொன்றைக் காணில்
அதை ஸ்ரீபாலனது கைகளொழிய வேறெக்கரங்களும்
ஏந்தாவோ? கனாக்காணினு மம்முகமோ வென்முன்
வந்துநிற்பது? சீச்சீ! இவையாவும் என்மனத்தளர்ச்சி
யையே தோற்றுவிக்கின்றன. இனி யான் செய்வதென்
னுளது? என் செயலா லாவ தொன்றுண்டோ
இறைவ! யாவுமுன் திருவிளையாடலெனவே உணரப்
பெற்றேன். யான் செய்த பிழையுளவேல் அவை
பொறுத் துன்கருணை மழைபொழிந் தென்னைப் புரப்
பதுன் கடமை. நெறிதவறு நீதிமானென நினைந்
திருக்கு மென்றனக் கருளாயேல், அறங்கோடிய வென்
வாழ்க்கை யென்னாம்? உடையா யுன்னடிக்கே யிதயம்
வைத்தேன், உலவா யின்பச் சுடரொளியே உன
தடைக்கல மெனதாவி யதை யேற்றுக் கொள்ளே"
எனக் கடவுளை வழிபட்டு மீண்டும் துயிலுற் றயர்ந்
துறங்கின னயலான்தானே.

சில அரும்பதங்களின் பொருள்:—கணிச்சி - கோடரி. கேழம் - பன்றி. விளிவுழி - சாகும்போது. எயிறு - பல். சேசம் - தலை. மேதி - எருமை. பதாகை - கொடி. அரிணம் - மான். தொக்கு - தோல். காலின்மைந்தன் - பீமசேனன். இறும்பூது - ஆச்சரியம். ஓதிமம் அன்னம். எதிலான் - அன்னியன், பகைவன். குனி கம்புள் - குதிக்கின்ற வானம்பாடி. கந்துகம் - குதிரை. சீரா - கவசம்.

கம்ப ராமாயணம்

அயோத்தியா காண்டம்.

1. மந்திரப் படலம்.

அமைச்சரி னமைதியை யாய்வத னருமை

திருவள்ளுவநாயனா ரமைச்சர்க்குப் பத்ததிகார
மளித்திருக்கின்றார். இவைகளில் முதலதி
காரம் அமைச்சரது பொதுவிலக்
கணங் கூறுகின்றது. பின் அவர்
சொல்வன்மை யுடையராயிருத்தல்,
அவரது வினை தூய்மையுடையதாயி
ருத்தல், அவ்வினையின்பால் அவர் திட்பமுடைய
ராயிருத்தல், தூய்மைவாய்ந்த வினையினைத் திட்ப
முடன் செய்யும்வகை ஆயவைகளின் சிறப்பினை வள்
ளுவர் விளக்குகின்றார். இனி, 'தூது' என்னும் அதி
காரம் வருகின்றது. மணக்குடவர் கொள்ளும் வண்
ணம், மந்திரிகளே மாற்றரசர்மாட்டு வினைமேற் சென்
றக்கால் அவரது திறத்தைக் கூறுவதாகக் கருதினும்
கருதலாம்; மற்றுப் பரிமேலழகருடன் அமைச்சனோ
டொப்பானுகலான் 'தூதனும்' அமைச்சியலில் அடங்
கினன் என்னக் கருதினுங் கருதலாம். எதுவாயினும்,
ஈண்டு ஆயப்புகும் விடயத்திற் கிணங்கும். அமைச்
சர்தம் தொழிலாகவும் தன்மையாகவும் இவ்வதிகாரங்
களினுள்ள குறள்கள் பேசுமெனினும், அவைகளிற்
பெரும்பகுதியை "அரசர்க்கும் ஒக்கக் கொள்ள
வேண்டு"மென்று மணக்குடவர் குறித்திருப்பதும்
நமக்குதவியாகும். கூறுவார் திருவள்ளுவர்:—

55-வது பக்கத் தொடர்ச்சி.

கருவியுங் காலமுஞ் செய்கையுஞ் செய்யு
மருவினையு மாண்ட தமைச்சு. 1.

[வினை செய்யுங்கால் அதற்கு வேண்டுங் கருவிகளும்,
அதற்கேற்ற காலமும், அது செய்யுமாறும், அவ்வாறு செய்
யப்படும் அரிய வினைதானும், வாய்ப்ப எண்ணவல்லவனே
அமைச்சனாவான்]

வன்கண் குடிகாத்தல் கற்றறித லாள்வினையோ
டைந்துடன் மாண்ட தமைச்சு. 2.

[வினைசெய்தற்கண் அசைவின்மையும் குடிகளைக் காத்
தலும், நீதிநூல்களைக் கற்றுச் செய்வன தவிர்வன அறித
லும் முயற்சியும், மேற்சொன்ன அவ்வங்கங்கள் ஐந்துடனே
திருந்த உடையானே அமைச்சனாவான்]

பிரித்தலும் பேணிக் கொளலும் பிரிந்தார்ப்
பொருத்தலும் வல்ல தமைச்சு. 3.

[வினைவந்துழிப் பகைவர்க்குத் துணையாயினாரை அவரிற்
பிரிக்க வேண்டில் பிரித்தலும், தம்பாலாரை அவர் பிரியா
மல் கொடை இன்சொற்களாற் பேணிக்கொள்வதும், முன்
னே தம்மினுந் தம்பாலாரினும் பிரிந்தாரை மீண்டுப்பொரு
த்தவேண்டில் பொருத்தலும் வல்லவனே அமைச்சனா
வான்]

தெரிதலுந் தேர்ந்து செயலு மொருதலையாச்
சொல்லலும் வல்ல தமைச்சு. 4.

[ஒரு காரியச் செய்கை பலவாற்றால் தோன்றில் அவற்
றுள் ஆவது ஆராய்ந்து அறிதலும், அது செய்யுங்கால் வாய்
க்கும் திறல் நாடிச் செய்தலும், சிலரைப் பிரித்தல் பொருத்
தல் செய்தற்கண் அவர்க்கு இதுவே செயற்பாலதென்று
துணிவு பிறக்கும்வகை சொல்லுதலும் வல்லவனே அமைச்
சனாவான்]

அறனறிந் தான்றமைந்த சொல்லானெஞ் ஞான்றுந்
திறனறிந்தான் தேர்ச்சித் துணை 5.

[அரசனாற் செய்யப்படும்அறங்களை அறிந்து தனக்கேற்ற
கல்வியால் நிறைந்தமைந்த சொல்லை யுடையனாய் எக்காலத்
தும் வினைசெய்யுந் திறங்களை அறிந்தான் அவர்க்குச் சூழ்ச்
சித் துணையாம்]

மதிநுட்ப நூலோ டுடையார்க் கதிநுட்பம்
யாவுள முன்னிற் பவை. 6.

[இயற்கையாகிய நுண்ணறிவைச் செயற்கையாகிய
நூலறிவோடு உடையராய அமைச்சர்க்கு மிக்க நுட்பத்தை
யுடைய சூழ்ச்சிகளாய் முன்நிற்பன யாவை உள]

செயற்கை யறிந்தக் கடைத்து முலகத்
தியற்கை யறிந்து செயல். 7.

[நூல்நெறியான் வினைசெய்யுந் திறங்களை அறிந்த விடத்
தும் அப்பொழுது நடக்கின்ற உலக இயற்கையை அறிந்து
அதனோடு பொருந்தச் செய்க]

அறிகொன் றறியா னெனினு முறுதி
உழையிருந்தான் கூறல் கடன். 8.

[அறிந்து சொல்லியாரது அறிவையு மழித்து அரசன் தானு மறியானேயாயினும் அக்குற்றம் நோக்கி ஒழியாது அவனுக்கு உறுதியாயின கூறுதல் அமைச்சனுக்கு முறைமை]

இத்தகைய இலக்கணம் வாய்ந்த அமைச்சர்வினை தூய்மையாய் இருத்தல்வேண்டு மென்பதை,

ஈன்றாள் பசிகாண்பா னாயினுஞ் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை

[தன்னைப் பெற்றவளது பசியை வறுமையால் கண்டு இரங்கும் தன்மையன் ஆயினான் எனினும், அதுசுட்டி அறிவுடையோர் பழிக்கும் வினைகளை ஒருவன் செய்யாதொழிக] எனவும், வினைத்திட்பம் எவ்வளவு இருத்தல்வேண்டு மென்பதை,

கடைக்கொட்கச் செய்தக்க தாண்மை யிடைக்
கொட்கி னெற்றா விழுமந் தரும்

[செய்யப்படும் வினையை முடிவின்கண் புலப்படும்வகை முன்னெல்லாம் மறைத்துச் செய்வதே திட்பமாவது. அங்ஙனமின்றி இடையே புலப்படுமாயின் அப் புலப்பாடு செய்வானுக்கு நீங்காத துன்பத்தைக் கொடுக்கும்]

எனவும், மந்திரி விரைந்து செய்ய வேண்டியது யாதென்பதை,

நாட்டார்க்கு நல்ல செயலின் விரைந்ததே
ஒட்டாரை ஒட்டிக் கொளல்

[வினை செய்வானால், தன் நாட்டார்க்கு இனியவற்றைச் செய்தலினும், தன் பகைவரோடு ஒட்டாரைத் தனக்கு நட்பாக்கிக் கொள்ளுதல் விரைந்து செய்யப்படும்]

எனவும், அமைச்சர் அரசற்கு எத்தூரத்தி லமைந்திருக்க வேண்டுமென்பதை,

அகலா தணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்.

[மாறுபடுதலையுடைய அரசரைச் சேர்ந்தொழுகும் அமைச்சர், அவரை மிக நீங்குவதும் மிக நெருங்குவதும் செய்யாது குளிர்காய்வார்போல இடைநிலத்தில் நிற்க]

எனவும், நாயனார் மற்ற அதிகாரங்களில் சொல்லியுள குறள்களும் நாம் கருதவேண்டியனவாம்.

இனி, சனகன்முன் கோசிகன் எடுத்தியம்பிய வண்ணம்,

துனியின்றியுயிர்செல்லச்சுடராழிப்படைவெய்யோன்
பனிவென்ற படியென்னபகைவென்று படிகாப்போன்
தனுவன்றித் துணையில்லான் தருமத்தின் கவசத்தான்
மனுவென்ற நீதியான் ....

[உயிர்கள்எல்லாம் வருத்தமின்றி வாழும்படி, திருமாலினது பிரகாசம் பொருந்திய சக்ராயுதம் போன்ற சூரியன் பனியை வெல்வதுபோல், பகையை வென்று உலகைக் காப்பவனும், தனது வில்லன்றி வேறு உதவி வேண்டாதவனும், தருமத்தையே தனக்குக் கவசமாக உடையவனும், மனுவேபோன்ற நீதியுடையவனும்.........]

ஆய தயரதனது அரசிற்கு அங்கமாயமைந்த அமைச்சர் அன்றம் மணிமண்டபம் வந்தெய்தினார் தகைமையைக் கம்பர் பின்வரும் பாசுரங்களிற் பேசுகின்றனர்.

குலமுதற் றொன்மையுங் கலையின் குப்பையும்
பலமுதற் கேள்வியும் பயனு மெய்தினார்
நலமுத னலியினு நடுவு நோக்குவார்
சலமுத லறத்தருந் தருமந் தாங்கினார்

[குலத்தின் தொன்மையும், கலையினது மிகுதியும், பல தத்துவ விசாரணைகளும், அக்கல்வி கேள்விகளின் பயனாகிய தெய்வபக்தியும் எய்தினவர். தங்கள் நன்மைக்கு முதலில் கேடு வருமானாலும் (அல்லது நன்மை யெனப்படுவதே முதலில் கெட்டாலும்) நடுநிலைமையே நோக்கியிருப்பவர். சஞ்சலம் பொய் கோபம் முதலியவைகளை யெல்லாம வேரோடு களைந்து தருமத்தையே தாங்குபவர்]

உற்றது கண்டு மேல்வந்
துறுபொரு ளுணருங் கோளார்
மற்றது வினையின் வந்த
தாயினு மாற்ற லாற்றும்
பெற்றியர் பிறப்பின் மேன்மைப்
பெரியவ ரரிய நூலுங்
கற்றவர் மான நோக்கிற்
கவரிமா வனைய நீரார்.

[முன் நிகழ்ந்தது கண்டு மேல் என்னநேரும் என்று உணரக்கூடியவர். விதியினால் ஒன்று நேர்ந்ததாயினும் அதனை மாற்ற வல்லவர். பிறப்பின் மேன்மையோடு கூடிய பெரியவர். அரியநூல்களும் கற்றவர். அவர் மானத்தைக் கருதுங்கால், ஒரு மயிர்போனாலும் பிறகு உயிர் வாழாத கவரிமாவைப் போன்றவர்.]

காலமு மிடனு மேற்ற
கருவியுந் தெரியக் கற்ற
நூலுறநோக்கித் தெய்வ
நுணித்தறங் குணித்த மேலோர்
சீலமும் புகழ்க்கு வேண்டுஞ்
செய்கையுந் தெரிந்து கொண்டு
பால்வரு முறுதி யாவுந்
தலைவற்குப் பயக்கு நீரார்.

[தாம் தெரியக் கற்றுள நூல்களுக்கு ஏற்றவாறு, காலமும் இடமும் தகுந்த கருவியும் நோக்கி, தெய்வத்தினதுள்ளத்தை நுண்ணிதின் உணர்ந்து, அறத்தை மதித்துப் பெருக்கிய மேன்மையோர். சீலமும் புகழுக்கு வேண்டும் செய்கையும் தெரிந்துகொண்டு தம் தலைவனுக்கு ஊழால் வரவல்ல நன்மைகளை உண்டாக்கிவைக்கும் தன்மையை உடையவர்.]

தம்முயிர்க் குறுதி யெண்ணார்
தலைமகன் வெகுண்ட போதும்
வெம்மையைத் தாங்கி நீதி
விடாதுநின் றுரைக்கும் வீரர்
செம்மையிற் றிறம்பல் செல்லாத்
தேற்றத்தார் தெரியுங் காலம்,
மும்மையு முணர வல்லார்
ஒருமையே மொழியு நீரார்.

[அரசன் கோபிப்பானானாலும், தம்முடைய உயிரின் நன்மையை எண்ணாமல், அவனது கோபத்தையுந் தாங்கி, நீதியை விடாது எதிர்நின்று உரைக்கும் வீரர். எது வரினும் நன்னெறியிலிருந்து விலகாத காட்சியுடையவர். மூன்று காலமும் உணர வல்லவர், ஆயினும் எக்காலத்திலும் ஒன்றே உரைக்கும் ஒழுக்கமுடையவர்]

நல்லவுந் தீயவு நாடி நாயகற்
கெல்லையின் மருத்துவ னியல்பி னெண்ணுவார்
ஒல்லைவந் துறுவன வுற்ற பெற்றியின்
தொல்லைநல் வினையென வுதவுஞ் சூழ்ச்சியார்.

[அரசனுக்கு நல்லவும் தீயவும் நாடி வைத்தியன்போல் நெடுந்தூரம் ஆலோசிப்பவர், அவனுக்குத் தீமை ஏதேனும் வந்தடையுங்காலத்தில், அவன் செய்துள தொல்வினை போல் விரைவில் வந்து உதவும் உபாய மறிந்தவர்]

அறுபதி னாயிர ரெனினு மாண்டகைக்
குறுதியி லொன்றிவர்க் குணர்வென் றுன்னலாம்
பெறலருஞ் சூழ்ச்சியர் திருவின் பெட்பினர்
மறிதிரைக் கடலென வந்து சுற்றினார்.

[இவ்வித மந்திரிகள் அறுபதினாயிரம்பேர் இருந்தாரெனினும் அரசனது நன்மையையே நினைப்பதில் இவர் உணர்வு அனைத்தும் ஒன்றே என்று எண்ணலாம். பெறுதற்கரிய சூழ்ச்சிகளை உடையவர்; இலக்குமியின் அருள் பெற்றவர். மடங்கி உருள்கின்ற கடலைப்போல் அம்மண்டபத்துள் வந்து சுற்றினார்]

இச்செய்யுள்களை ஓதிவருங்கால் வான்மீகி முனிவரது மொழிகளும் குறளினது சொற்களும் இதனில் எதிரொலி இசைக்கக் கேட்கின்றோமாதலின் அவையிரண்டையும் கருத்தினில் நன்கு கொண்டே கம்பர் இதனைப் பாடினார் என்னல்வேண்டும். ஆயினும் அவைகளிலிருந்து சில எடுத்தும் சில விடுத்தும் தாமாகச் சில சேர்த்தும் இப்புலவர்பெருமான் புதியதோர் அமைச்சின் சித்திரம் தீட்டியுளார் என்பது எளிதில் புலப்படும். இச்சித்திரத்தி னமைப் பெத்தகைத் தென்பதும், மற்ற விரண்டினும் இது சிறிது வேறாயிருத்தலின் காரணத்தையும் இனிக் கருதுவாம்.

மானத சாத்திரம்

[PSYCHOLOGY]

[46-வது பக்கத் தொடர்ச்சி]

நடத்தை (Behaviour)

உயிரேணியின் கீழ்நிலையிலுள்ள முதனிலை உயிருளியை முன்னான் (Protozoa) என வழங்குவோம். இவ்வினத்தில் மாறன் என்பது ஒரு வகை. தன் வடிவை மாற்றிக்கொண்டே விளங்குதலின் மாறன் (amoeba) என இதனை அழைப்போம். இது கருக்குழம்புத் துளிபோல நீரில் மிதந்து செல்லும். இச்செந்துக்கள் மிகவும் சிறியன. வெறுங் கண்களுக்குப் புலப்படா. அணுக்காட்சிக் கண்ணாடி (microscope) வழியாகவே அவைகளைக் காண இயலும். இவ்வினத்தில் பெரியதொன்றும் சிறியதொன்றும் நீந்திச்செல்லக் காண்கின்றோம்? என்ன நிகழ்கின்றது? பெருமாறன் சிறுமாறனைக் கண்டு திரும்புகிறது. தனக்குக் கைபோல உதவும் பிதுக்கங்களை வெளிநீட்டுகின்றது. அப்பிதுக்கங்களுக்குள் சிறுமாறன் சிக்கிக்கொண்டு அசையாமல் நிற்கின்றது. பெருமாறன் திரும்பி அதனையும் உட்கொண்டு தன் வழியே போகின்றது. சிறிது பொழுதானதும், சிறுமாறன் இயங்கத் தொடங்கித் தன்னைச் சுற்றியுள்ள பொருளில் காணக்கிடக்கும் இடைவெளி வழியாகத் தப்பிச் செல்கிறது. பெருமாறன், அதுகண்டு, மறுபடியும் திரும்பிவந்து சிறுமாறனைத் தன்னுள் அகப்படுத்திக்கொண்டு தன் வழியே செல்கின்றது. பெருமாறனின் பின்புறமாகச் சிறுமாறன் மறுமுறையும் தன்னைத் தப்புவித்துக் கொண்டு வெளியேறுகிறது. பெருமாறன், இம்முறை முன்னாக ஓடிவந்து, அதனைச் சுற்றி வளைத்துக்கொள்ளவே, 'தலை எழுத்தே' எனச் சிறுமாறன் வாளா கிடக்கின்றது. சிறிதுபொழுது தாழ்ந்ததும் தன்னைச் சுற்றிச் சுவரென நிற்கும் பொருளைத் தாக்கிச் சிறுமாறன் வெளியேறித் தொலைவில் தப்பி ஓடிப் பிழைக்கின்றது. இச்செயல்கள் நோக்கமுடையனவாகக் காணப்படுதலின் நடத்தையேயாம். இவற்றைத் திருப்பங்கள் (Tropism) என்றும், மடக்குகள் (Reflex) என்றும் எவ்வாறு சொல்லமுடியும்.

மாறனில் மற்றொரு வகையான உயிருளி, காற்கழற்காப்பு [காற் கழற் காப்பு - Slipper; அரைக் கழற்காப்பு - Shoe; முழுக்கழற்காப்பு - Boots] வடிவினதாக விளங்குகின்றது. இதற்கு மயிரிமை போன்ற புலனுறு முறுப்பு உண்டு. அதனை இயக்குவதே அதன் இயக்கமாகும். அதனை இயக்கியே உணவை உட்கொள்கிறது. அதனை உற்றுநோக்கினால் என்ன காண்கிறோம்? சிலபொழுது அவ்விமையை அப்புறமும் இப்புறமும் இயக்கிக்கொண்டேயிருக்கக் காண்கிறோம். சிறிதுபொழுது வாளா நிற்கின்றது. பின்னர் இயங்கத் தொடங்குகின்றது. கெட்டிப் பொருள் ஏதேனும் எதிர்ப்பட்டால் சிலபோது பின்னாகத் திரும்பி அதைவிட்டு நீந்திச் செல்கின்றது. சிலபோது அதன் முன்னாக நீந்திச்சென்று அதன் மேலே தங்குகின்றது. புறநிலையும் புறப்பொருள்களும் ஒரேவகையாகவே இருக்க, இதன்செயல்கள் இவ்வாறு வேறுபடுவது எதனாலே? இவ்வேற்றுமை அகநிலையைப் பொறுத்ததன்றோ? நோக்க வேறுபாடே இவ்வியக்க வேறுபாட்டை உண்டுபண்ணுகிறது எனல் வேண்டும்.

கடற்காற்றுமலரானைப் பற்றி முன்னரே கூறியுள்ளோம். தசையைத் தின்கிறது; துணியை உமிழ்கிறது. தசைநீர் ஊறிய துணியைத் தந்தால் சிறிது பொழுது அளவு, வேற்றுமை யுணராது உட்கொள்கிறது. பின்னர் உண்மை உணர்ந்து அதனை வெளியே தள்ளுகிறது. இவ்வாறு வேற்றுமையை உணர்ந்த பின்னும் துணியை அதன் வாயருகே கொண்டுபோவோமானால் அத் தாக்கலினின்றும் தப்பிப்பிழைக்க, உடலைச் சுருக்குகின்றது. அப்பொழுதும் துணியை அதன் வாயருகே கொண்டுபோவதை நாம் நிறுத்தாமற் போனால், பின்னும் உடலை மிகுதியும் சுருக்குகின்றது. அச்சுருக்கத்தால் கல்லில் ஒட்டிக் கிடக்கும் அதன் அடிப்புறம் கல்லின் நின்றும் விடுபடுகின்றது; வேறோர் இடத்திற்கு நீந்திச் செல்கிறது. இவையும் நோக்கமுடைய செயல்களாதலின் நடத்தையேயன்றோ? துணியின் தாக்கலின்நின்று விடுபடப் பல செயல்களைச் செய்கின்றது; ஒருசெயல் பயன்படாதபோது மற்றோர் செயல் புரிகின்றது. தன் செயலைப் பயன்படும் வகையில் மாற்றியமைப்பது நடத்தையின் இயல்பாம்.

நிலப்புழுவின் செயல்களும் நடத்தையாகவே விளங்குகின்றன. இஃது ஓர் இலையைத் தன் வளைக்குள் இழுத்துச் செல்லும்போது, அவ்விலையின் கூரிய முனையையே பிடித்திழுத்துச் செல்கின்றது. அப்பொழுதுதான் அவ்விலை எளிதாக உள்புகுகின்றது. பல ஓலை நறுக்குகளை மும்முனை (Triangle) வடிவமாக வெட்டி அதன் எதிரே எறிந்தால், அவற்றையும் கூரிய முனை வழியாகவே பிடித்து இழுத்துப்போகக் காண்கிறோம். பல முனையினும் ஒருமுனை கூரியதென்பதை அவ்விலையையோ நறுக்குக்களையோ, ஓரம் முழுதையும் தொட்டுப்பார்த்து உணர்கின்றதென விளங்கவில்லையா. பல முனைகளின் இயல்பையும் உற்றுப் பார்த்துணர்கிறது; ஒரு முனையின் இயல்போடு மற்றொன்றை ஒத்துப் பார்க்கின்றது; மற்றையவற்றை

விட ஒரு முனையே கூரியது என முடிவுசெய்கிறது. அம்முடிவிற் கேற்ப அம்முனையைப் பயன்படுத்திக் கொள்கிறது. ஒத்துப்பார்த்து ஒரு முடிவிற்கு வருதல் (Comparative Judgment) உயரிய மக்களின் அறிவுநிலையல்லவா? ஆனால் இந்நிலை சிறிதளவேனும் நிலப் புழுவினிடத்துக் காணக் கிடக்கவில்லையா?

இயற்கைச் சேயல்:-இச்செயல்களை எல்லாம் இயற்கைச் செயல்கள்என வழங்குவர் அறிஞர். இயற்கையமைப்பிற்கும் செயற்கை யமைப்பிற்கு முள்ள வேற்றுமையை நாம் அறிதல் வேண்டும். நம் தலைமயிரின் நிறம், கண்ணின் நிறம், நம் உடலின் வடிவம் முதலியன இயற்கை யமைப்பாகும். ஆனால் உணவின் குறைவால் நம் உயரமும் எடையும் குறைபடுவதையும் காண்கின்றோம். வடு முதலியனவும் நோயால் ஏற்படும் உடற்குறைகளும் செயற்கையமைப்புகளாம். நம் இயக்கங்களில் மடக்குச் செயல்கள் இயற்கையாய் அமைந்தவை; கருவிகளைப் பயன்படுத்திக்கொள்ளலும், குரலைத் திருத்தியாளலும் செயற்கையால் நிகழ்பவையாம். ஆனால் சில மக்களுக்கு இவை இயற்கைப்போக்காக அமைந்து கிடக்கின்றன. அவற்றைச் செயற்கைப்பயிற்சியால் திருத்தமுறச் செய்கின்றனர். சினம், அமைதி முதலிய உள்ளக் கிளர்ச்சிகளும் மனநிலையும் இயற்கை யமைப்பெனலாம். ஆனால் இவையும் செயற்கையால் மாறுவனவேயாம். எப்போதும் களித்துத் திரியும் இயல்புடையவன் ஒருவனுக்கு நாம் கொடுமை புரிவோமானால் அவ்வியல்பு சிறிதுமாறுகிறதன்றோ. நமது பழக்கங்களோ செயற்கையாம். இங்கும் சிலவற்றைப்பழக்கத்தில் கொண்டுவருவது சிலருக்கு இயல்பாகக் காணக்கிடக்கின்றது. எனவே இயல்பும் பயிற்சியும் இவ்வாறு ஒன்றோடொன்று இணைந்து காணப்படுகின்றன. இவற்றின்வேற்றுமையை அறிவது அருமையாயினும் உள்ளத்தியற்கைநூ லாராய்ச்சிக்கு இன்றியமையாததாம். ஒரு பழக்கம் கொடியதென அறிந்தால் அதை நீக்குவது எங்ஙனம்? இவ்வழக்கம் ஓர் இயற்கைப்போக்கைப் பற்றியதென அறிவோமானால் அவ்வியற்கைப்போக்கை வேறொரு வகையில் வளர்க்கும் வழியை அறிந்து அப்பழக்கத்தை விடலாம். அவ்வகையினை அறியாதவரையில் அப்பழக்கத்தை மாற்றமுடியாதன்றோ? இவ்வகையினும் இவ்வாராய்ச்சி இன்றியமையாததாகக் காணப்படுகிறது.

மதிப்புரை.

நளாயினி வெண்பா

[56வது பக்கத் தொடர்ச்சி]

ஆங்கில இலக்கிய சரித்திரத்தை வரையுங்கால் பிரன்சு கலைஞர் டேய்ன் என்பவர், ஷேக்ஸ்பியர் முதலாக விளங்கிய ஆங்கில நாடகக்கவிகள் தம் பாத்திரங்களில் பெண்பாலாரை எவ்வகைச் சிறப்பில் அமைத்திருக்கின்றனர் என்னும் விடயத்தை ஆராய்பவராகிப் பெண்மையின் உண்மைப் பெருமையைப் பின்வருமாறு விளக்குகின்றார்:—

"The feminine nature rests in sweetness, devotion, patience, inextinguishable affection—a thing unknown in distant lands, in France especially so: a woman in England gives herself without drawing back, and places her glory and duty in obedience, forgiveness, adoration, wishing and professing only to be absorbed daily deeper and deeper in him whom she has freely and forever chosen; Hence the happiness and strength of the marriage tie — [In France it is but an association of two comrades, tolerably alike and tolerably equal, which gives rise to endless disturbance and bickering] There are score of these women who, under the severest tests and strongest temptations, display this wonderful power of self-abandonment and devotion. The soul in this (English) race, is at once primitive and serious. Women keep their purity longer than elsewhere. They lose respect less quickly; weigh worth and characters less suddenly: They are less apt to think evil, and to take the measure of their husbands. To this day, a great lady accustomed to company, blushes in the presence of an unknown man, and feels bashful like a little girl: the blue eyes are dropped, and a child-like shame flies to her rosy cheeks. English woman have not the smartness, the boldness of ideas, the assurance of hearing, the precocity, with which the French make of a young girl, in six months, a women of intrigue and the Queen of the drawing room. Domestic life and obedience are more easy to them. More pliant and more sedantary, they are at the same time more concentrated and introspective, more disposed to follow the noble dream called duty, which is hardly generated in mankind but by silence of the senses. They are not tempted by the voluptuous sweetness which in modern countries is breathed out in the climate, in the sky, in the general spectacle of things; which dissolves every obstacle, which causes privation to be looked upon as a snare and virtue as a theory. They can rest content with dull sensations, dispense with excitement, endure weariness, and in this monotony of a regulated existence, fall back upon themselves, obey a pure idea, employ all the strength of their hearts in maintaining their moral dignity. Thus supported by innocence and conscience, they introduce into love a profound and upright sentiment, abjure coquetry, vanity and flirtation: They do not lie nor simper. When they love, they are not tasting a forbidden fruit, but are binding themselves for their whole life. Thus understood, love becomes almost a holy thing: the spectator no longer wishes to be spiteful or to jest; women do not think of their own happiness, but of that of the loved ones; they aim not at pleasure, but at devotion."

தம்மையே தமர்க்கு நல்கும் கடவுட் தனித் தகைமையால் புருடரிற் பெரியோர் மாதர். இஃதுணராமல், ஆடவர்க்கு இணையென மாதர் மாற முயல்கின்றேமென் றுழல்வதெல்லாம் அவர் தமக்குறிய நிலையிலிருந்து இழிவதல்லால் உயர்வதோ ஒருபோதும் ஆகாது. இத்தத்துவத்தின் உயிர்நிலையை நன்கறிந்த வுணர்வோடு இந் "நளாயினி வெண்பா" பாடப் பெற்றிருக்கின்ற மேன்மையை வியந்து பாராட்டுகின்றோம். ஸ்ரீமான் சண்முக முதலியாரவர்கள் இந்நூலை இயற்றியதில் அருமையானவோர் கருமத்தைச் செய்திருக்கின்றா ரென்பதில் ஐயமில்லை. அனைவரும் இதனை ஓதி மகிழ்வாரென நம்புகின்றோம். "கல்வியாகிய மாரியில்லாப் பைங்கூழெனக் கலங்கும் நங் காரிகையர் நவீன நாகரிகமெனும் மேற்றிசைக் காற்றினாலும் மொத்துண்டு தடுமாற்ற மெய்தித் தவிக்கலாயினர்," என்று இவ்வாசிரியர் நூன்முகத்தில் வரைந்துளர். மேற்றிசையிலும் மாதர் திறத்தில் நாகரிகத்தின் மெய்ம்மை இவ் விந்தியர் பண்டுநோக்கிய வண்ணமே இருந்ததென்பது 'டேய்ன்' என்பவரது மேற்கூறிய உரைகளிலிருந்து நன்கு புலப்படும். ஆதலின், நமது ஆசிரியர் வருந்துமாறு, மேனாட்டு நாகரிகத்தைப் பாராட்டிப் பின்பற்றுவோர் நம்முடைய நாகரிகத்தைப் பின்பற்றுவதற்கு வேண்டிய ஒழுக்கத்தின் திட்பமும், மற்று அம்மேனாட்டு ஆங்கிலேயர்களது நாகரிகத்தின்மெய்ந்நிலையை உணர்தற்குரிய கல்வியும் அறிவும் இல்லாதவரே என்று எண்ணல் வேண்டும்.

எம்மிடம் கிடைக்கும் புத்தகங்கள்

கம்பராமாயணம்—பாலகாண்டம்

(T. N. சேஷாசலம் ஐயர் பதிப்பு.)

சிற்றடக்கமாய் அழகிய கட்டிடத்தில் புதிய முறையில் பதிப்பிக்கப் பெற்றுளது. பதிப்பாசிரியர் பதம்பிரித்தும், தொகைநிலைத் தொடர்களை விரித்தும், அன்வயப்படுத்தியும், அவாய்நிலைகளை வருவித்தும், கவியின் சொற்கொண்டே பொருளை விளக்குகின்றார். அரும் பதவுரைவும், விசேடக்குறிப்புகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. விலை. ரூ. 3.

ஏமாங்கத் திளவரசன்

(T. N. சேஷாசலம் ஐயர் எழுதியது)

இலக்கிய நயங்கள் யாவும் துளங்குமோர் இன்னியற் காதற்கதை. அன்பின் வன்மையும் வாய்மையின் தூய்மையும், பேரவாவின் பேதமையும், புன்கவிபுகுந்துசெய்யும் துன்மதிச்சூழ்ச்சியும், பொருந்திக்கலந்து கதையினை நடத்தி வைக்கின்றன. சம்பாஷணைத்திறமும் சொல்நயச் சுவையும் கருத்தினைக் கவர்கின்றகதையமைப்பும், பாத்திரங்களின் பொருத்தமும் வாய்ந்தது இந்நூல். விலை. ரூ. 1.

முருகன்—ஓர் உழவன்

ஸ்ரீமான் K. S. வெங்கடரமணி M. A. B. L. ஆங்கிலத்தில் எழுதிய நூலிற்கு ஸ்ரீமதி கிருஷ்ணகுமாரிசெய்த சிறந்தமொழி பெயர்ப்பு. உழுதுண்டு வாழ்வார் நிலையின் ஏற்றமும், தொழுதுண்டு பின் செல்பவர் தாழ்மையும் செவ்வனே இந்நாவல் நூல் எடுத்துக் காட்டுகின்றது. விலை. ரூ. 1-8.

திருக்குறள்

(மூலமும் சொற்குறிப்பகராதியும் விஷய ஒப்புக் குறளும்—வா. மார்க்கசகாயம் செட்டியார் பதிப்பு.)

சிற்றடக்கமான இப்பதிப்பில் அட்டவணைமாத்திரம் 300 பக்கங்களில் அளிக்கப்பட்டிருக்கின்றன. திருக்குறளைப் படித்து ஆராய விரும்புவார்க்கு இவ்வட்டவணை மிகவும் உபயோகமானது. இதனருமை பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக் காட்டுவது சுலபமன்று. விலை. அணா 12.

குலசேகர ஆழ்வார் திருவாய் மலர்ந்தருளிய

பெருமாள் திருமொழி

மூலமும், பு. பா. இரத்தின சபாபதி நாயக்கர் இயற்றிய பதவுரை, விசேடவுரை இலக்கணக் குறிப்பு, சரித்திர ஆராய்ச்சி முதலியவைகளுடன் சேர்ந்த விருத்தியுரையும் கொண்டது. பிரபந்தத்தின்கண் பயிற்சி இருப்போர்க்கும் பயில முயல்வோர்க்கும் இப்பதிப்பு மிகுத்த பயனும் உதவியும் அளிக்கவல்லது. காலிகோ ரூ. 1-4. மார்பில் ரூ. 1.

அகத்திய முனிவர் அருளிச்செய்த

ஆறெழுத்தந்தாதி

முருகக் கடவுளை முழுமுதற்பொருளாக உபாசனை செய்வதற் குரியதாய், ஷடாக்ஷர மந்திரத்தின் வைபவத்தை அகத்தியரே பாடியுளர் எனக் கருத்தப்படுகின்ற நூறு செய்யுள் கொண்ட நூல். பென்ஷன் டாக்டர் V. S. அருணசலம் பிள்ளையவர்களால் விரிவும் தெளிவும் பொருந்திய உரையோடு பதிப்பிக்கப் பெற்றது. விலை. அணா 12.

எல்லாப் புத்தகங்களுக்கும் தபால் வி. பி. செலவு வேறு.

கலாநிலயம் ஆபீஸ், புரசைபாக்கம், சென்னை

நாஷனல் இன்ஷூயரன்ஸ் கம்பனி, லிமிடெட்.

(ஹெட் ஆபீஸ்:—கல்கத்தா)

இந்திய இன்ஷூயரன்ஸ் ஆபீஸ்களில் மிகவும் முன்னேறிவரும் ஆபீஸ் இதுவொன்று.

குறைந்த பிரீமியமும், மற்றவகைகளிலுள்ள பலவித சவுகரியங்களும் இக்கம்பனியை எல்லாரும் விரும்புவதற்குக் காரணமாயிருக்கின்றன.

வேறெங்கேயாகிலும் நீங்கள் இன்ஷூர் செய்துகொள்ளத் தீர்மானிப்பதன்முன் தயவுசெய்து, எங்கள் ரேட்டுக்களையும் எம்மிடத்தில் இன்ஷூர் செய்வதால் வரக்கூடிய நன்மைகளையும் லாபங்களையும் ஒத்திட்டுப் பாருங்கள்.

பிராஸ்பெக்டஸ் ஏஜன்ஸி முதலியவைகளுக்கு:—

கெ. எஸ். கோபாலய்யா, கிளைக்காரியதரிசி

மதராஸ் பிரான்ச், லோன் ஸ்கோயர்,

பிராட்வே, சென்னை.

ANCIENT JAFFNA

A MOMENTOUS BOOK

BY

Mudaliar C. RASANAYAGAM, C. C. S.

With a ForeWord By

Professor S. KRISHNASWAMI AIYANGAR, M. A.

An authentic History of North Ceylon, particularly of Jaffna, based on Epigraphic, Linguistic, Archeo-logical researches, is stated here for the first time in a connected, logical manner from ancient times up to the occupation of the Island by the Europeans.

Every student of History would read this book with pleasure and profit.

Price Rs. 5—8—0. V. P. Charge Extra.

MANAGER:—

KALANILAYAM,

11, VELLALA STREET,

Purasawalkam, MADRAS.

OUR OWN PUBLICATIONS

THE ARAVIDU DYNASTY OF VIJAYANAGARA Vol. 1. 1542-1614

by THE REV. HENRY HERAS, S.J., M.A., Professor, Indian History, St. Xavier's College, Bombay, with a preface by SIR RICHARD CARNAC TEMPLE, BT. **Rs. 10**

The History of the Aravidu Dynasty of Vijayanagara could properly be entitled 'The Forgotten Dynasty of the old Forgotten Empire'. Mr. Robert Sewell devoted three chapters to the history of this dynasty and Fr. Heras promises three big volumes of which this is the first. From the time of Mr. Sewell's publication it has often been repeated that the Empire of Vijayanara met its end on the field of Talikota, in 1565. The present work discloses that the Empire continued in its splendour for several years. The author shows moreover that this period marked the climax of the Telugu domination over the most southern part of the peninsula of India.

THE LAW AND THEORY OF RAILWAY FREIGHT RATES

by K. C. SRINIVASAN, M.A., F.C.S. **Rs. 10**

THE POLITICAL PHILOSOPHIES SINCE 1905

by POF. BENOY KUMAR SARKAR, M.A. **Rs. 4**

ECONOMIC DEVELOPMENT :

Snap-shots of World movements in Commerce, Economic Legislation, Industrialism and Technical Education *by* PROF. BENOY KUMAR SARKAR. Recommended by the Calcutta University for M.A. in commerce and in Allahabad University as a Reference book. **Rs. 8.**

LIFE OF BARRISTER SAVARKAR

by CHITRA GUPTA. The story of the life of this famous patriot written by a close friend is packed with thrilling incidents, of how as a Leader of the revolutionist party, he led the movement in India and in England, how he was arrested and his dramatic escape at Marseilles by jumping out through the port-hole of the ship. A book of enchanting interest and full of interesting lessons to our New India. **Rs. 1.8**

HINDU-PAD-PADASHAHI :

or a Critical Review of the Hindu Empire of Maharashtra *by* VINAYAK DAMODAR SAVARKAR. with an introduction by Dr. R. C. MAZUMDAR. M.A., Ph. D., Dacca. **Rs. 3**

ENGLAND'S EDUCATIONAL POLICY IN INDIA

by V. V. OAK B.A., S. T. C. Pp. 1 to 24x168. This book deals about the educational policy pursued by the Government of India during the last 100 years in which Mr V. V. Oak, has attempted to draw a realistic picture of the educational position in India as compared with the other civilised countries, by means of graphical illustrations and tabular statements. **Rs. 2**

LOK. TILAK'S GITHA RAHASYA or THE PHILOSOPHY OF ACTION

by MANGALVEDKAR, *3rd revised edn.* **Rs. 2**

DIALOGUE DIVINE AND DRAMATIC

by GITANANDA BRAHMACHARI **Re. 1**

1. கோபால் புதிய தமிழ் வாசக முதல் புஸ்தகம் ஆ மா. ஸ்ரீ. இராகவன் B. A. L. T. ... 0 2 6
2. கோபால் புதிய தமிழ் வாசக இரண்டாம் புஸ்தகம் ... 0 3 0
3. கோபால் புதிய தமிழ் வாசக மூன்றும் புஸ்தகம் ... 0 4 0
4. கோபால் புதிய தமிழ் வாசக நான்காம் புஸ்தகம் ... 0 4 6
5. கோபால் புதிய தமிழ் வாசக ஐந்தாம் புஸ்தகம் ... 0 6 0
6. ஆஞ்சநேயர்—ம. குப்புசாமி முதலியார் ... 0 5 0
7. சிறுமணிக் கதைகள்—எஸ். எஸ். அருணகிரிநாதர் ... 0 5 0
8. கப்பர் அல்லது கவியரசு - ஆ. நா. கன்னையா ... 0 5 0
9. தமிழ்ச் சிற்றிலக்கண வினாவிடை கா.ரா. கோவிந்தராஜ முதலியார் 0 4 0
10. சிறுவர் இந்து தேச சரித்திரம் வி ஜயராம ஐயர் ... 0 5 0
11. வலிவிக்ஸ் துரைத்தனவிளக்கம் 1-பாகம் 4-வகுப்புக்குரியது—S சுப்பிரமணிய ஐயர் ... 0 5 0
12. ஷை இரண்டாம் பாகம் 5-வது வகுப்புக்குரியது ... 0 6 0
13. கோபால் வாய்ப்பாடு ... 0 1 6
14. சூரவாதித்த சோழன், R. சாம்பசிவ சர்மா ... 0 12 0
15. புத்திமானே பலவான் ஏ. பாசுராமையர் ... 0 10 0
16. கிருஷ்ணதேவராயர் - கே.பி சேஷாத்திரி ஐயங்கார்... 0 8 0
17. பகீரதன், ஆ. நா. கன்னையா ... 0 6 0
18. பத்திராயு அல்லது ஆட்சிக் குரியோன்-மே. வீ. வேணு கோபால பிள்ளை ... 0 6 0
19. இலங்கேசன்–S. சீனிவாசையர்... 0 6 0
20. **English Selection for Higher Forms.** illustrated Revised Edition **Re 1.**
21. **TheNew Era Story Books Series,** Book I by C. Gordon, B. Ed. **As. 3.**
22. Book II " **As. 4.**
23. Book III " **As. 5.**
24. **Nanda the Paraiah Saint** by C. S. Rangaswami Aiyangar B. A., L. T. **As. 3.**
25. **Fables from Mahabharata** by N. Paramasivam Iyer B. A., L. T. **As. 3.**
26. **Chandrahasa** Revised by Prof. J. C. Rollo. M. A. **As. 6.**
27. **The Clay Cart** (In the press) **As. 6.**

(V. P. Charges, Extra of the Prices.)

B. G. PAUL & Co., FRANCIS JOSEPH STREET, MADRAS.

வர்த்தமானம்

டயரிவரவு:—சென்னையிலுள்ள பி. ஜி. பால் கம்பெனியார் வெளியிட்ட 1930ம் வருட டயரி வரப்பெற்ருேம். அதில் பஞ்சாங்கமும், திருவிழா தினங்களும், தபால்நிலைய விபரமும், ஆகாயத்தபால் நிலைய விபரமும் குறிக்கப்பட்டுளன. சட்டைப்பையில் போட்டுச் செல்வதற்கியன்றவாறு சிற்றடக்கமான கட்டட முடையது. அவர்களிடமிருந்து 1930-ம் வருடக் காலண்டரும் வரப்பெற்ருேம்.

***

சுயேச்சை தினம்:—ஜனவரி மாதம் 26-ந் தேதி சுயேச்சை தினமாகக் கருதப்படும். அன்று ஊர்வலங்களும் மாலையில் பொதுக்கூட்டங்களும் இந்தியா முழுதும் நடைபெறும் என்று தெரிகிறது. காந்தியடிகள், 'சுயேச்சை' என்ற தலைப்பில் எழுதிய வியாஸம் அக்கூட்டத்தில் படிக்கப்படுமாம். அன்று கூட்டத்தில் பூர்ண சுயேச்சையே இந்தியாவின் நோக்கம் என்றும் அதுபெற இந்தியரானோர் சாத்வீக முறையில் வேலைசெய்வது அவர்கடன் என்றும் காங்கிரஸ்காரர்கள் பிரதிக்ஞை எடுத்துக் கொள்வார்களாம்.

***

குஜராத்து வித்தியாபீடப் பட்டமளிப்புக் கூட்டம்:- இக்கூட்டத்தில் காந்தியடிகள் தலைமைவகித்துப் பேசினர். அப்பொழுது அவர், மாணவர்கள் சுயராஜ்ய வேலையில் அவர்களது பங்கை உணர்ந்து வேலைசெய்ய வேண்டுமென்றும், அவ்வப்போது காங்கிரஸ் கூறும் வகை பலாத்காரமற்ற வழியில் வேலைசெய்து, சிறைக்கூட வாசம்வரின் அதைச் சந்தோஷத்துடன் ஏற்க வேண்டும் என்றும், தான் ஒருகால் சிறைக்கு அனுப்பப்பட்டால் அதனால் பலாத்கார முயற்சி ஏற்படாது காத்துக் கொள்ளவேண்டும் என்றும், பலாத்காரம் பரவினல் உயிரைக் கொடுத்தாவது அதைத் தடுக்க வேண்டும் என்றும், பலாத்காரமிலாத சாத்விகவழியே சுயராஜ்யத்திற்குக் குறுக்குவழியென்றும் கூறினர்.

***

இந்திய ராணுவம்:—'மான்செஸ்டர் கார்டியன்' என்னும் பிரிட்டிஷ் பத்திரிகை, தலையங்கமொன்றில் இந்திய ராணுவத்தில் இந்தியர் இடம்பெற வேண்டிய அவசியத்தைப் பற்றி எழுதுவதாவது:—

"இந்தியாவில் அனர்த்தம் ஒன்றும்ஏற்படாதவாறு காக்கவேண்டின், நாம் உடனே செய்யவேண்டியதில் மிகக் குறைந்தது, இந்தியா சீக்கிரத்தில் குடியேற்ற நாட்டு அந்தஸ்துப் பெறுவதற்குத் தடையாய் இருப்பவைகளை அகற்றுவதாம். இராணுவத்திலும் அதிகமான இந்தியர் இடம் பெறவேண்டும். இவ்விஷயமாய் நாம் முயற்சி செய்யின் ஏகாதிபத்திய விஷயத்தில் இந்தியாவின் அன்பை நாம்பெறக்கூடும். ஆகவே இவ்வழியில் ராஜதந்திரிகள் முற்படுதல் நல்லபயனளிக்கும் என்பது நிச்சயம்."

***

காங்கிரஸிற்குப்பின்:—"காங்கிரஸ் சுயேச்சைத் தீர்மானத்தை நிறைவேற்றிய பிறகு அரசியல் வாதிகளுக்குள் பலகட்சிகள் ஏற்பட்டுவிட்டன. டாக்டர் பெஸண்டம்மையார் குடியேற்றநாட்டு அந்தஸ்திற்காக வேலைசெய்ய ஒருகட்சி சேகரித்து வருகின்றுர். இக்கட்சியார் சட்டசபை செல்வர், உத்தியோகங்களை ஏற்பர். மேலும் குடியேற்ற நாட்டு அந்தஸ்தைத் தரும் அரசியல் முறையைப் பற்றிய திட்டம் ஒன்றையும் அக்கட்சியார் தயாரித்து, இத்திட்டத்தைப்பிரிட்டிஷ் பார்லிமெண்டார் ஏற்கும்படி செய்ய முயல்வர். சென்னை ராடிகல் கட்சியென்ற ஒருகட்சியும் ஏற்பட்டுளது. இக்கட்சியாரும் சட்டசபைப் பிரவேசத்தில் நம்பிக்கை கொண்டுள்ளார்கள். காங்கிரஸ்காரர்களின் சுயேச்சை முயற்சிக்கு விரோதமாகவும், குடியேற்ற நாட்டு அந்தஸ்துபெறவும் வேலைசெய்யப் பம்பாயில் மிதவாதிகள் ஒரு ஏற்பாடு செய்து வருகின்றனர்" என இவ்வாரச் செய்திகள் மூலம் தெரியவருகின்றது.

***

லார்ட் பிர்க்கன்ஹெட்டின் யோசனை:—லண்டனிலுள்ள 'டெயிலி டெலகிராப்' என்னும் பத்திரிகையில் இவர் இந்திய விஷயமாய் எழுதிய வியாசங்களின் கருத்து:—

இந்தியஅமிதவாதிகள் காங்கிரஸில்பூர்ணவிடுதலைத் தீர்மானம்செய்து, அதுபெற முயற்சிகள் செய்யப்போவதாகத் தெரிகின்றது. இங்கிலாந்தின் ஆட்சி இந்தியாவினின்று அகன்றிடுமானல் அந்த நிமிஷமே இந்தியாவிற்கு அனர்த்தம் ஏற்பட்டுவிடும். இந்திய அமிதவாதிகள் யோசனையில்லாதும் அவசரப்பட்டும் வரிகொடாமை சட்டமறுப்பு முதலிய காரியங்களில் புகுவார்களேயாயின் இங்கிலாந்து ஒருகைபார்க்கவேண்டியதுதான். அப்பொழுதுதான் அவர்கள் இங்கிலாந்தின் பலத்தையும், தங்கள் முட்டாள் தனத்தையும் உணர்வர். இந்தியாவின் தற்கால நிலையை யோசிக்குங்கால், லார்ட் ரஸ்ஸல் கூறியதுபோல் குடியேற்றநாட்டு அந்தஸ்தையும்வகிக்க இந்தியருக்குயோக்யதை இல்லை.

பஞ்சாப்கவர்னராயிருந்த ஸர்மைக்கல் ஓட்வியரும், இந்தியாவில் கிளர்ச்சி பலக்குமுன்னரே, அடக்குமுறையால் அமைதியை யேற்படச் செய்ய வேண்டுமென்றும், இல்லையேல் காரியங்கள் முற்றிய பிறகு அரசாங்கத்தார் கடுமையான முறைகளைக்கையாளவேண்டிய அவசியமேற்படுமென்றும் பிரிட்டிஷ்பத்திரிகைகளில் எழுதி வருகின்றுர்.

***

புதுவையில் அரவிந்தர் யோகவாழ்வு:-ஸ்ரீ அரவிந்த கோஷ் சென்ற இருபது வருடகாலமாகப் புதுச்சேரியில்தமது தவவாழ்க்கையில்ஈடுபட்டிருப்பதைத் தமிழ்நாட்டினர் அறிவர். அரவிந்தர் வாழ்க்கையைப்பற்றி அவரது சகோதரரான பரீந்திர குமார் கோஷ் ஒருபத்திரிகைப் பிரதிநிதியிடம் கூறியதின் சாரமாவது:—

ஆசிரமத்தில் இப்பொழுது 85-பேர் வசித்து வருகின்றனர். ஸ்ரீ அரவிந்தரின் ஆசிரமத்தைச் சுற்றியுள்ள பத்தொன்பது கட்டிடங்களில் இவர்கள்வாசஞ் செய்து வருகின்றனர். இவர்களெல்லோரும் ஆன்மஞானத்தைநாடிவந்தவர்கள். இவர்களை ஸாதகர் என்று அழைப்பது வழக்கம். ஒவ்வொரு ஸாதகரும் நிஷ்டையிலிருப்பதற்காகத் தனித்தனி அறைகள் ஏற்பட்டிருக்கின்றன. ஆசிரமத்தைச் சேரும் ஸாதகர் தமது பொருள்யாவற்றையும் ஆசிரமத்திற்கே கொடுத்துவிடுவர். ஆச்ரம நிர்வாகமுழுதும் மீரா தேவியாரால்நடத்தப்படுகிறது. தேவியாரை எல்லோரும் மாதா என்று அழைப்பார்கள். இவர் பிரான்சு தேச அரசாங்கசபை அங்கத்தினராயிருந்த பால் ரஷார் என்ற அறிஞரின் மனைவியா யிருந்தவர்.

ஸாதகர்களன்றி வேறுபலரும் குடும்பங்களுடனும் ஆசிரமத்துக்கு வெளியே வசித்துவரும் சீடரும் இருக்கின்றனர். ஸாதகர்களுள் ஆங்கிலேயர், அமெரிக்கர் பிரெஞ்சுக்காரர் முதலியோரும் இருக்கின்றனர். எழுவர் முஸ்லிம்களாயிருப்பது கவனிக்கத்தக்கது. இவர்களுள்ளும் நான்குபேர் மாதர்கள். இவர்கள் ஐதராபாத்வாசிகளாவார். தமிழர்களும்இருக்கிருர்கள்.

ஸ்ரீ அரவிந்தகோஷ் வருடத்தில் மூன்று முறையே தம் அறையை விட்டு வெளிவருவார். மீராதேவியின் பிறந்த தினமாகிய பிப்ரவரி 21ௗ, தமது பிறந்த தினமாகிய ஆகஸ்ட் 15ௗ, தாம்ஆன்மஞானம்பெற்ற தினமாகிய நவம்பர் 24ௗ ஆகிய மூன்று தினங்களில் அரவிந்தர் வெளிவருவார். அப்படி வந்தாலும் ஆசிரமத்திலுள்ளவரே அவரைப் பார்த்தல்முடியும் ஆனல்அவர் எவருடனும்பேசுவதில்லை. தெய்வத்திருவருளைப்பெறவே அவர் நிஷ்டையில் ஈடுபட்டிருக்கிருர்."

KALANILAYAM.
REG. No. M. 2324.

கலா நிலயம்

1-ஆவது வால்யூம் 1928-ஆம் ஆண்டுப் பிரதிகள்

1. சேக்கிழாரும் திருக்கண்ணப்பரும் :—சேக்கிழார் திறனும் கண்ணப்பர் பக்தியும் விளக்கும் கட்டுரைகள் 51.
2. கம்ப ராமாயணம் :— பால காண்டம் ஆற்றுப்படலம் முதல் மிதிலைக்காட்சிப் படலம்வரை கட்டுரைகள் 51.
3. அகப்பொருள் வரலாறு:—காட்சி முதல், ஓதற் பிரிவுவரை கட்டுரைகள் 18.
4. மலர்வனம், பழமுதிர் சோலை :—சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, புறநானூறு, ஐங்குறுநூறு முதலியவைகளினின்று எடுத்தமைத்த தனிநிலைக் கட்டுரைகள் 14.
5. காந்தார நாட்டுக் கட்டழகி :—காவிய வியல் நயம் பெற்ற நற்றமிழ் நாவல் 51 இதழ்களில் வந்துளது.
6. தமிழ்ப் பாடம் :—நளவெண்பா, சுயம் வர காண்டம் முதல் கலிதொடர் காண்டம் முடிய, 52 இதழ்களில் வந்துளது.
7. தேவாரமும் ஐந்திணையும்:—தமிழ் இலக்கண ஐந்திணைப் பாகுபாட்டைத் தேவாரத்தின் துணைகொண்டு விளக்கிய கட்டுரைகள்.
8. வானசாஸ்திரம் :—வான சாஸ்திர வுண்மையை யாவரும் அறியுமாறு வரையப்பட்ட கட்டுரைகள் 20.

மேனாட்டுத் தத்துவ அறிஞர்களாய பிரீடரிக்நிஷேயன், எபிகுயூரன், ஜீனோன், பைரோன், அரிஸ்டாட்டில் முதலானோர் தத்துவ ஆராய்ச்சி, இலக்கிய ஏற்ற ஆராய்ச்சியென்ற இலக்கியங்களை ஆயும் முறை விளக்கும் 6 கட்டுரைகள், கார்லைல் எமர்லன், ரஸ்கின், டால்ஸ்டாய், ஆஸ்கார் ஒயில்ட், ராபர்ட் பர்ன்ஸ் ஆனோர் கட்டுரை மொழிபெயர்ப்பு, இலக்கியக்கதைகள், நாலடி நானூற்றின் திறம், பாரசீகப் புலவர் உமார் கயாம் காட்டிவைக்கும் தத்துவநிலை, முதலிய பல வியாசங்கள்.

2-ஆவது வால்யூம் 1929-ஆம் ஆண்டுப் பிரதிகள்

1. கலா நிலயம்:—வறியரோ நாம், உரிமையின் பொய்மை, கட்டளைக்கல், செய்விற் சொல்வதே அரிது, அரிசிவிற்க அந்தணன் வேண்டுமாம், புலமைக்குரிய பொய், கலைகளோகதி 6, வள்ளுவர் வாய்மை 6, பாரதி, இராஜா அண்ணாமலை சங்கீத கலாசாலை, சொற்றொடர் ஆரவாரம் 3, கல்சரைப்பற்றிய கட்டுரை 24 முதலியன ஆகும்.
2. கம்பராமாயணம் :—மிதிலைக்காட்சிப் படலம் முதல் பரசுராமப்படலம் முடிய 48 கட்டுரைகள்.
3. அப்பர்:—பிறப்பும், இளமையும் யௌவனமும் பல சமயவாராய்ச்சியும், சிவஸ்தல யாத்திரை, அப்பர் பாடல்களும் அவற்றின் சந்தர்ப்பமும், கவிகளின் பகுதிகள், நாடகவியல், அப்பர் கவித்திறம் ஆய கட்டுரைகள் 50
4. வில்லி பாரதம்:—ஆதிபர்வமுதல் சபாபர்வம் வரை கட்டுரை 32.
5. ஏமாங்கதத்திளவரசன் :—காவிய நலம் பெற்ற காதற் கதை. 20 இதழ்களில் வந்துளது.
6. அகப்பொருள் வரலாறு.—காவற் பிரிவு, பொருள்வயின் பிரிவு, பரத்தையிற் பிரிவு கட்டுரைகள் 6.
7. மாறன் பாப் பாவினம்:—16 இதழ்களில் வந்துளது.
8. குலசேகரர்:—குலசேகரர் தத்துவத்தை விளக்கும் கட்டுரைகள் 23.
9. தமிழ்ப்பாடம்:—நளவெண்பா கலிநீங்கு காண்டம், திருவேங்கடமாலை, திருவரங்கத்துமாலை, திருவரங்கத்தந்தாதி, திருவரங்கக் கலம்பகம், 50 இதழ்களிலும் வந்துளது.
10. நம்மாழ்வார் வைபவம் :—நம்மாழ்வார் பாடிய பிரபந்த ஆராய்ச்சிக் கட்டுரைகள் 12-ல் வந்துள.

மானத சாத்திரம், மொழிபெயர்ப்புக் கட்டுரைகள் 11, அண்டபுராணம் - காப்பி, தேயிலை புகயிலை முதலிய சிறப்புப் படலங்கள் 5, மலர்வனம் 8, பழமுதிர்சோலை, திருவாய்மொழியின் திறம், கண்கண்டதெய்வம், உடலும் மனமும், நன்னெறியின் ஏற்றம், சிந்தாமணி நீதிச் செய்யுள் ஆய பல கட்டுரைகள்.

மேற்கூறிய இரண்டு வருடப் பிரதிகளும் எம்மிடம் பயிண்டு செய்தும், செய்யாமலும் கிடைக்கும்.

விலை விவரம்:—தபால் செலவு உள்பட, வால்யூம் ஒன்றிற்கு

உள்நாடு	ரூ.	அ.	ப.	வெளிநாடு	ரூ.	அ.	ப.
பையிண்டு செய்யாதது	8	0	0	பையிண்டு செய்யாதது	9	8	0
காலிகோ கில்ட்	9	8	0	காலிகோ கில்ட்	11	0	0
ஆப்லெதர் கில்ட்	10	0	0	ஆப்லெதர் கில்ட்	11	8	0

:: கலாநிலயம் ஆபீஸ், புரசைபாக்கம், சென்னை ::

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)